2023

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

சனாதிபதி அலுவலகம்

2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

நிறுவனத்தின் பெயர் : சனாதிபதி அலுவலகம்

செலவினத் தலைப்பு இலக்கம் : 01

உள்ளடக்கம்

பொருளடக்கம்			பக்க இலக்கம்
அத்தியாயம் 01	-	நிறுவனத்தின் விவரம் / நிறைவேற்றுப் பொழிப்பு	3
அத்தியாயம் 02	-	2023 முன்னேற்றம் மற்றும் 2024 எதிர்கால கண்ணோட்டம்	6
அத்தியாயம் 03	-	2023 வருடத்துக்கான ஒட்டுமொத்த நிதிச் செயலற்றுகை கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதாணிப்புக்கள்	36
அத்தியாயம் 04	-	செயலாற்றுகை சுட்டிகள் (செயறடபாட்டுத் திட்ட பிரகாரம்)	58
அத்தியாயம் 05	-	பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை அடையும் செயலாற்றுகை	99
அத்தியாயம் 06	-	மனித வள விபரம்	107
அத்தியாயம் 07	-	இணக்க அறிக்கை	116

அத்தியாயம் 01

நிறுவனத்தின் விவரம் / நிறைவேற்றுப் பொழிப்பு

தொலைநோக்கு

"2048 இல் முழுமையாக அபிவிருத்தியடைந்த இலங்கை"

செயற்பணி

அபிவிருத்தியடைந்த இலங்கையை கட்டியெழுப்புவதற்கான அனைத்து நோக்கங்கள் மற்றும் இலக்குகளை செயற்திறனுடனும் உற்பத்தித் திறனுடனும் நிறைவேற்றுவதற்காக சரியான திசையில் அரசை வழிநடாத்துதல்

நோக்கம்

i. மாண்புமிகு சனாதிபதியவர்களின் தொலைநோக்கினை யதார்த்தமாக்குவதற்காக உற்பத்தித்திறன், செயற்திறன் மற்றும் செயலூக்கத்துடன் பங்களிப்புச் செய்தல்

ii. அரசியலமைப்பு மற்றும் பல்வேறு கட்டளைச்சட்டங்களினால் மாண்புமிகு சனாதிபதியவர்களால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை அச்சட்ட ரீதியான ஏற்பாடுகளுக்கு அமைவாக செயற்திறன் மற்றும் ஊக்கத்துடன் நிறைவேற்றுவதற்காக உதவுதல்

iii. சனாதிபதி அலுவலகத்தால் மேற்கொள்ளப்படும் ஒழுங்குபடுத்தல் மற்றும் ஒருங்கிணைப்பு பணிகளை வினைத்திறனுடன் முன்னெடுப்பதற்காக நடவடிக்கை எடுத்தல்

iv. அமைச்சுக்கள் மற்றும் பல்வேறு துறைகளுக்குரிய அபிவிருத்திப் பணிகளை ஒருங்கிணைத்தல் மற்றும் தேவைக்கு ஏற்றவாறு வசதிகளை வழங்குதல்

v. சனாதிபதி அலுவலகத்துக்கு ஏற்புடைய சகல முகாமைச் செயற்பாடுகளையும் ஒருங்கிணைப்புடன் முன்னெடுத்தல்

vi. நிர்வாக துஷ்பிரயோகம், விடுபட்டவைகள் அல்லது தாமதம் காரணமாக இடம்பெற்றுள்ள மக்கள் துன்பங்கள் /பிரச்சினைகளைக் குறைத்தல்


vii. வறுமையை ஒழித்தல் மற்றும் அபிவிருத்திப் பிரச்சினைகளுக்குத் தேவையான மூலோபாய ரீதியான தலையீட்டை மேற்கொள்ளல்

viii. இற்றைப்படுத்தப்பட்ட தரவு பிரவேசத்தை உருவாக்குவதன் மூலம் மக்களுக்கு நன்மையளிப்பதை செயற்திறனுடன் மேற்கொள்ளல்.

ix. சிறந்த வினைத்திறனுடன் அரச நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக பங்களிப்புச் செய்வதன் மூலம் மக்கள் நன்மையடையக் கூடிய வாய்ப்புக்களை அதிகரித்தல்

X. மக்கள் நலனோம்புகையினை உறுதிசெய்தல்

1.4 நிறுவனக் கட்டமைப்பு



1.5 சனாதிபதி அலுவலகத்தின் கீழ் உள்ள பிரதான பிரிவுகள்

1) சனாதிபதியின் பணியாட்டொகுதி பிரதானி பிரிவு
2) சனாதிபதியின் பிரத்தியேக செயலாளர் அலுவலகம்
3) சனாதிபதியின் செயலாளர் பணியகம்
4) அரசியலமைப்பு மற்றும் நியதிச்சட்ட அலுவல்கள் பிரிவு
5) பாராளுமன்ற மற்றும் அமைச்சரவை அலுவல்கள் பிரிவு
6) மனித வளங்கள், நிர்வாக மற்றும் போக்குவரத்துப் பிரிவு
7) பொருளாதார அலுவல்கள் பிரிவு
8) உபாய வழிமுறைகள் அலுவல்கள் பிரிவு
9) உணவுப் பாதுகாப்பு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் கருத்திட்ட அபிவிருத்தி பிரிவு
10) விவசாய உற்பத்தி திறன் மற்றும் சுற்றாடல் பிரிவு
11) நிறுவன ஒருங்கிணைப்பு பிரிவு
12) தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப மற்றும் டிஜிட்டல்மயப்படுத்தல் பிரிவு
13) உள்ளக கணக்காய்வுப் பிரிவு
14) வட மாகாண ஒருங்கிணைப்பு பிரிவு
15) சமூக அலுவல்கள் பிரிவு
16) கணக்கு மற்றும் நிதிப் பிரிவு
17) அபிவிருத்தி ஒருங்கிணைப்பு பிரிவு
18) பொருளாதார உறுதிப்பாட்டுப் பிரிவு
19) சட்ட அலுவல்கள் பிரிவு
20) சனாதிபதி ஊடகப் பிரிவு
21) விசேட கருத்திட்டப் பிரிவு
22) மக்கள் தொடர்புகள் பிரிவு
23) சனாதிபதி தொழிற்சங்க உறவுகள் பிரிவு
24) ஒம்பூட்ஸ்மன் அலுவலகம்
25) சனாதிபதி நிதியம்

1.6 சனாதிபதி அலுவலகத்தின் கீழ் உள்ள நிதியங்கள்

1) சனாதிபதி நிதியம்

1.7 வெளிநாட்டு உதவி பெறும் கருத்திட்டங்கள் பற்றிய தகவல்கள்

அ. கருத்திட்டத்தின் பெயர்: உணவு நிவாரண உதவி நிகழ்ச்சித்திட்டம்

ஆ. பங்களிப்பு முகவர் நிறுவனம்: ஐக்கிய நாடுகளின் உலக உணவு நிகழ்ச்சித்திட்டம்

இ. கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு: 23,360 மி.ரூபாய்

ஈ. கருத்திட்ட காலம்: 2023 - 2027

02 அத்தியாயம்


2023 முன்னேற்றம் மற்றும் 2024 எதிர்கால கண்ணோட்டம்

2.1 முன்னேற்றம் 2023

2.1.1 கொள்கை வழிகாட்டல்

பேண்தகு பொருளாதார வளர்ச்சியை நோக்கமாகக் கொண்ட போட்டித்தன்மை, திறந்த தன்மை மற்றும் சமூக நீதி ஆகியவற்றின் அடிப்படையில் அபிவிருத்திக்கு வழிகாட்டும் வேலைத்திட்டம் ஒன்றின் கீழ் இலங்கையானது 2048 சுதந்திரத்தின் நூற்றாண்டை அண்மிக்கும் வேளையில் அபிவிருத்தியடைந்த ஒரு பொருளாதாரத்தைக் கொண்ட ஒரு நாடாக மாற்றமடைதல் அரசின் இலக்காக உள்ளதென பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்ட துலங்கள்களை முன்னோக்கி கொண்டு சென்று 2023 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்ட நடுத்தர கால சட்டகத்தினுள் நடைமுறைப்படுத்தப்படும் மூலோபாய வழித்தட வரைபடத்தின் பிரதான துறைகளை பின்வருமாறு காட்ட முடியும்.



2.1.1.1 பெரும்பாகப் பொருளாதார உறுதிப்பாட்டை உறுதி செய்தல்

2022 இல் நிலவிய பொருளாதார நெருக்கடியை தீர்த்தல் மற்றும் பொருளாதார உறுதிப்பாட்டுக்கான பல்வேறு நடவடிக்கைகள் தற்போதைய சனாதிபதி அவர்கள் கதவியேற்ற 2022 யுலை மாதம் முதல் புதிய அரசின் கீழ் நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதாரத்தை மிளிரச் செய்வதற்காக பெரும்பாக பொருளாதார சட்டகத்தில் குறிப்பிடத்தக்க ஒரு மாற்றம் ஏற்படுத்தப்பட்டு வருவதுடன் தற்போது அடையப்பெற்றுள்ள முன்னேற்றம் பின்வருமாறு.

- **சர்வதேச நாணய நிதியத்தின் நீடித்த கடன் வசதி நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தல் (Extended Fund Facility-EFF)**

இலங்கையில் பெரும்பாக பொருளாதார உறுதிப்பாட்டை ஏற்படுத்தல் மற்றும் அரச கடன் பேண்தகு தன்மையை ஏற்படுத்துவதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் நீடித்த கடன் வசதி நிகழ்ச்சித்திட்ட மறுசீரமைப்புக்கள் சிலவற்றின் அடிப்படையில் விவரமான பொருளாதார மறுசீமைப்பு நிகழ்ச்சித்திட்டமாக திட்டமிடப்பட்டுள்ளதுடன் அரச நிதி உறுதிப்பாடு, மிகவும் அவதானத்திற்கு உட்படக் கூடிய மக்களைப் பாதுகாப்பதற்கான பலமான சமூக பாதுகாப்பு வலையமைப்பினை நடைமுறைப்படுத்தல், விலை உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதற்கான பல்பக்க மூலோபாயம், இறைமைக் கடன் மறுசீரமைப்பு மூலோபாயம் மற்றும் நெகிழ்வுத் தன்மையுள்ள செலாவணி விகிதாசாரத்தின் கீழ் சர்வதேச ஒதுக்கினை மீண்டும் கட்டியெழுப்புதல் மற்றும் ஊழலைக் குறைப்பதற்கான தீர்வுகளை வழங்குதல் ஆகியவற்றை இலக்காக கொண்ட விரிவான கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புக்கள் உள்ளடங்கும்.

அதன் பிரகாரம் சர்வதேச நாணய நிதியமும் இலங்கையும் 2022 இல் கைச்சாத்திட்ட 48 மாத கால நீடித்த கடன் நிகழ்ச்சித்திட்டத்தின் ஒப்பந்தம் பிரகாரம் (3 பி.ஐ.அ.டொ) 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 20 ஆம் திகதி நீடிப்புக் கடன் வசதி அனுமதிக்கப்பட்டது. அதன் பிரகாரம் வழங்கப்பட்ட இரண்டாம் தவணையும் உள்ளடங்களாக ஒட்டுமொத்த வெளிநாட்டு பெறுகைகளின் (வெ.பெ/SDR) மொத்தப் பெறுமதி 508 மில்லியன் வெ.பெ (சுமார் 670 மில்லியன் அ.டொ) வழங்கப்பட்டுள்ளது. 2024 மார்ச் மாதம் 221 ஆம் திகதி இந்த கடன் நிகழ்ச்சித்திட்டத்தின் இரண்டாவது மீளாய்வை நிறைசு செய்வதற்கான பொருளாதார கொள்கை மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

- **அரச வருமானத்தை அதிகரித்தல் மற்றும் செலவு மீளாய்வு**

வரிக் கட்டமைப்பை திருத்துதல் மற்றும் வரி ஏற்றத்தாழ்வை சரி செய்வதற்காக 2023 வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக திருத்தப்பட்ட வரிச்சட்டங்கள் 2023.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுவதுடன் அதன் மூலம் எதிர்வரும் காலங்களில் பெரும்பாக பொருளாதார சமநிலையை மேலும் சீர்செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

2023 ஆம் ஆண்டு அரச செலவு முகாமைத்துவம் தொடர்பில் பல குறிப்பிடத்தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள்;

- கடுமையான சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் உள்ளிட்ட செலவுக் கட்டுப்பாடு மற்றும் பகுத்தறிவுசார் நடவடிக்கைகள்
- தெரிவுசெய்யப்பட்ட நோக்கங்களுக்காக அரச ஊழியர்களுக்கு 5 ஆண்டுகள் சம்பளமற்ற லீவு வழங்குதல்
- அரச சேவையின் ஆணட்சேர்ப்பு செயன்முறை மீளாய்வுக்காக பிரதம அமைச்சரின் செயலாளர் தலைமையில் உத்தியோகத்தர் குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன் அதன் பிரகாரம் அரச சேவையை மிகவும் செயற்திறன் மற்றும் பயனுள்ளவாறு பேணிச் செல்வதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய அத்தியவசிய ஆட்சேர்ப்புக்கள் தொடர்பில் முன்னுரிமைகளை இனம் கண்டு அதற்காக காலச்சட்டகங்களை பரிந்துரை செய்தல் மற்றும் தற்போது அரச சேவையில் உருவாகியுள்ள பிரச்சினைகளுக்கு பொருத்தமான பரிந்துரைகளை சமர்ப்பித்தல் ஆகியன இக்குழுவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.
- 2023 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க பாராளுமன்ற வரவுசெலவு அலுவலக சட்டத்தை செயல்வலுப்படுத்தி வரவுசெலவு அலுவலகம் தாபிக்கப்பட்டுள்ளது.
- அதிக செலவுடைய 10 அமைச்சுக்களின் செலவுகுளை மீளாய்வு செய்து பரிந்துரை சமர்ப்பிப்பதற்காக அரச செலவுகள் மீளாய்வுக் குழுவை (PERC) தாபித்தல்
- வங்கித் துறை மறுசீரமைப்புக்காக 2023 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க வங்கி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தை செயல்வலுப்படுத்தல் போன்ற நிதி உறுதிப்பாட்டுக்கு உதவும் கொள்கைகள் மற்றும் மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேற்குறித்த மூலோபாயங்கள் உள்ளடங்களாக மேற்கொள்ளப்பட்ட மறுசீரமைப்புக்கள் மூலம் அடைந்துகொள்ளப்பட்டுள்ள பிரதிபயன்களாக;

I. பணவீக்கத்தை சாதாரண நிலைமைக்கு கட்டுப்படுத்தல்

2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட ஆண்டுக்கான பணவீக்கம் 69.8 சதவீத வரலாற்றின் உயர்ந்தபட்ச பணவீக்கத்தைப் பதிவு செய்ததை தொடர்ந்து ஓராண்டு காலத்திற்குள் 2023 செப்டம்பர் மாதம் சுமார் 1.3 சதவீத குறைந்தபட்ச பெறுமதியை அடைந்து கொள்ள முடிந்தது.
மிகவும் உயர்வான பெறுமதியாக காணப்பட்ட பணவீக்கமானது ஓராண்டு போன்ற குறைந்தளவு காலத்திற்குள் தனி இலக்கத்திற்கு கொண்டு வருவதற்கு முடிந்தமை காரணமாக பொருளாதாரத்தின் தரப்பினர்களின் எதிர்கால பணவீக்க எதிர்பார்ப்புகள் பெரும்பாலும் சாதகமான மட்டத்தில் உள்ளபோதும் பணவீக்க அழுத்தத்தைக் கட்டுப்படுத்தல் மற்றும் பெரும்பாக பொருளாதார உறுதிப்பாட்டுக்கு உதவ்வதற்கான தொடர்ச்சியான மேற்பார்வை முக்கியமானதாகும்.

II. பொருளாதாரத்தின் குறிப்பிடத்தக்க வளர்ச்சி

2022 ஆம் ஆண்டு நான்காம் காலாண்டின் மறைப் பொருளாதார அபிவிருத்திக்குப் (- 12.4 %) பின்னர் 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் இலங்கைப் பொருளாதாரத்தில் சிறிதளவு வளர்ச்சி (1.6%) பதிவாகியது. அவ்வாறே இந்த வளர்ச்சியை மேலும் உயர்வடையச் செய்து 2023 நான்காம் காலாண்டில் 4.5 சதவீத பொருளாதார வளர்ச்சியை அடைந்துகொள்வதற்கு முடிந்தது. 2022 ஆம் ஆண்டு ஒட்டுமொத்த வருடாந்த வளர்ச்சியான 7.3 சதவீத எதிர்கணிய வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2023 இல் மொத்த வருடாந்த வளர்ச்சி 2.3 சதவீத எதிர்கணிய வளர்ச்சி கண்டுள்ளது. அவ்வாறே 2022 ஆம் ஆண்டு விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவை ஆகிய துறைகளில் பதிவாகிய முறையே எதிர்கணிய 4.2, எதிர்கணிய 16 மற்றும் எதிர்கணிய 2.6 சதவீதத்துடன் ஒப்பிடும் போது 2023 ஆம் ஆண்டு விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவை ஆகிய துறைகளில் பதிவாகிய முறையே எதிர்கணியம் 2.3, எதிர்கணியம் 9.2 மற்றும் எதிர்கணியம் 1.20 சதவீத பெறுமதியினைப் பதிவுசெய்து வளர்ச்சிப் பாதையை நோக்கி நகர்ந்துள்ளது. அவ்வாறே 2022 ஆம் ஆண்டு பதிவாகிய ஆளுக்குரிய மொத்த தேசிய உற்பத்தி 3,464 அமெரிக்க டொலரில் இருந்து 3,83 அமெரிக்க டொலர்கள் வரை அதிகரித்துள்ளது. மத்திய வங்கியின் எதிர்வுகூறலுக்கு அமைவாக 2024 ஆம் ஆண்டு பொருளாதாரத்தை நேர்கணிய பெறுமதியில் பேணிச்செல்லக் கூடியதாக இருக்கும்.

III. வெளிநாட்டு துறையின் அபிவிருத்திகள்

2022 ஆம் ஆண்டு பதிவாகிய 5185 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்த வர்த்தக பண்டக் கணக்கு நிலுவையுடன் ஒப்பிடுகையில் 2023 ஆம் ஆண்டு வர்த்தக பண்டக் கணக்கு நிலுவை 4900 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை வீழ்ச்சியடைந்ததுடன் இப்பெறுமதி 2010 ஆம் ஆண்டின் பின்னர் பதிவாகிய ஆகக்குறைந்த பெறுமதி ஆகும். இந்த நிலைமைக்கு ஏற்றுமதி வருமானத்துடன் ஒப்பிடுக்கையில் இறக்குமதிச் செலவினம் குறைவடைதல் பெரும்பாலும் தாக்கம் செலுத்தியுள்ளதாகவும் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் அண்மைக் காலத்தில் தளர்த்தப்பட்டாலும் இறக்குமதிகள் தொடர்ச்சியாக குறைந்த மட்டத்தில் காணப்பட்டதாகவும் மத்திய வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

அவ்வாறே 2022 ஆம் ஆண்டு பதிவாகிய சுமார் 3.8 பில்லியன் அமெரிக்க டொலர் வெளிநாட்டில் தொழில் புரிவோர்களின் பண அனுப்புதல்களுடன் ஒப்பிடுகையில் 2023 ஆம் ஆண்டு சுமார் 6.0 பில்லியன் அமெரிக்க டொலர் குறிப்பிடத்தக்க அளவு பலம் மிக்க பெறுமதி பதிவாகியது. பொருளாதாரம், அரசியல் மற்றும் பாதுகாப்பு உறுதித்தன்மையை பேணிச் செல்வது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்துதல் ஆகியன காரணமாக சுற்றுலாப் பயணிகள் வருகையில்

குறிப்பிடத்தக்க அதிகரிப்பு பதிவாகியதுடன் சுற்றுலாப் பயணிகள் வருகை 2022 இல் பதிவாகிய பெறுமதியுடன் ஒப்பிடுகையில் இரண்டு மடங்கு அதிகரிப்பு காரணமாக 2023 இல் சுற்றுலாப் பயணிகள் வருகை 1,487,303 பதிவு செய்யப்பட்டு தொடர்ச்சியாக வழமை நிலைக்கு வந்தது. அதன் பிரகாரம் சுற்றுலா மூலமான உழைப்பும் 2022 ஆம் ஆண்டு பதிவாகிய 1,136 மில்லியன் அமெரிக்க டொலருடன் ஒப்பிடுகையில் 2023 ஆம் ஆண்டு 2,068 மில்லியன் அமெரிக்க டொலர் வரை அதிகரித்தது. 2023 ஆம் ஆண்டு அதிகளவு சுற்றுலாப் பயணிகள் வருகை பதிவாகிய நாடுகளுள் இந்தியா, ரஷ்யா, ஐக்கிய இராச்சியம், ஜெர்மனி மற்றும் சீனா ஆகிய நாடுகள் முக்கியம் பெறுகிறது.

மேலும் பிணையங்கள் சந்தை மற்றும் பங்குச் சந்தை ஆகியவற்றில் வெளிநாட்டு தேறிய முதலீட்டுப் பெறுவனவுகள் பதிவாகியது. அவ்வாறே உள்நாட்டு அந்நிய செலாவணி சந்தையில் இலங்கை மத்திய வங்கி மேற்கொண்ட தேறிய அந்நிய செலாவணிக் கொள்வனவு, சர்வதேச நாணய நிதியத்தின் நீடிப்பு கடன் வசதியின் கீழ் கடன் விடுவித்தல் மற்றும் பல்தரப்பு நிதி நிறுவனங்களிடம் பெற்ற வெளிநாட்டு நிதியீட்டம் மூலம் 2022 ஆம் ஆண்டின் இறுதியில் சுமார் 1.9 பில்லியன் அமெரிக்க டொலர்களாக காணப்பட்ட மொத்த மொத்த உத்தியோகபூர்வ ஒதுக்கு 2023 ஆம் ஆண்டு டிசம்பர் மாத இறுதியில் சுமார் 4.4 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை குறிப்பிடத்தக்க அளவு உயர்வடைந்தது.

அவ்வாறே 2022 ஆம் ஆண்டின் இறுதியில் அமெரிக்க 363.11 அமெரிக்க டொலர்களாக காணப்பட்ட இலங்கை ரூபா 2023 ஆம் ஆண்டின் இறுதியில் 323.92 அமெரிக்க டொலர் வரை 12.1 சதவீத பெறுமதி ஏற்றத்தை அடைந்தது.

2.1.1.2 சிறந்த பொருளாதார நிர்வாகம் மற்றும் பொருளாதார தீர்மானம் மேற்கொள்ளத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்

பொருளாதாரத்தின் கட்டமைப்பு ரீதியிலான பலவீனங்களை அகற்றுதல் மற்றும் பொருளாதார நிர்வாகத்தை திறம்பட வைத்தல் மூலமாக அரச முதலீடுகளின் செயற்திறனை அதிகரித்தல், ஊழல் அபாயத்தைக் குறைத்தல் மற்றும் நிதி ஒழுங்கிற்கு உதவுவதற்குத் தேவையான செயற்பாடுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

- **பொருளாதார ரீயாக மீண்டெழும் / தாங்கிக் கொள்ளும் (Economic Resilience) ஆற்றலை அதிகரித்தல்**

I. எதிர்வரும் 25 ஆண்டுகளுக்கான தேசிய பொருளாதாரக் கொள்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட குறித்த வழித்தட வரைபடத்தின் பிரகாரம் செயற்படுவதற்கும் அதன் சரியான அரச நிதி வழிநடாத்தல் செயற்பாட்டை உறுதிசெய்வதற்கும் பூரண சுயாதீனம் கொண்ட பாராளுமன்ற வரவு செலவு அலுவலகம் ஒன்றைத் தாபிப்பதற்காக 2023 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க பாராளுமன்ற அலுவலக சட்டம் 2023 யூன் மாதம் 27 ஆம் திகதி முதல் செயல்வலுப்படுத்தப்பட்டுள்ளது.

II. மேற்கொள்ளல், இதற்காக ஆகக்கூடுதலான வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெறும் 10 அமைச்சுக்களுக்காக செலவு மீளாய்வுக் குழு (Public Expenditure Review Committee); 23/0256/604/030 ஆம் இலக்க மற்றும் 2023.02.06 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் ஏற்புடைய துறையின் 30 நிபுணர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். தற்போது அரச செலவுகளை மீளாய்வு செய்வதற்கான குழு (Public Expenditure Review Committee - PERC) மூலம் 7 குழுக்களின் இறுதி அறிக்கைகள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் 2024 வரவு செலவுத்திட்டம் தொடர்பில் அந்த அறிக்கைகளின் பரிந்துரைகள் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளன.

III. நிதிக் கொள்கைத் தீர்மானங்கள் மேற்கொள்ளல் தொடர்பில் கூடுதலான சுயாதீனம் வழங்குதல் மற்றும் கூடுதல் சுயாதீனமுள்ள ஓர் நிறுவனம் என்ற வகையில் செயற்படுவதற்கு மத்திய வங்கிக்கு இடமளிக்கும் வகையில் 2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கி சட்டத்தை 2023 செப்டம்பர் மாதம் 14 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் செயல்வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் சட்டத்தின் பிரகாரம் இலங்கை மத்திய வங்கியின் நிர்வாக சபையின் மற்றும் நிதிக் கொள்கைகள் குழுவின் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

IV. ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் ஒப்பந்தங்களுடன் இணங்கி ஊழலுக்கு எதிரான சட்டங்களை குறிப்பிடத்தக்க அளவு அபிவிருத்தி செய்தல் மற்றும் ஊழலை எதிர்கொள்வதற்காக ஒழுங்கமைக்கப்பட்ட ஏற்பாடுகளை அறிமுகம் செய்து 2023 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊழலுக்கு எதிரான சட்டத்தை (ACAACA) 2023 ஆகஸ்ட் 08 ஆம் திகதியிலிருந்து செயல்வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இலங்கையின் சட்டங்களை சர்வதேச தரங்களுடன் வரிசைப்படுத்துவதற்காக இச்சட்டம் பெறும்பாலும் துணை புரியும்.

V. கொழும்பு துறைமுக நகரத்தின் அபிவிருத்தியானது மொத்த தேசிய உற்பத்திக்கும் நேரடி வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சலுக்கும் புதிய தொழில்வாய்ப்பு உருவாக்கத்திற்கும் குறிப்பிடத்தக்க அளவில் செல்வாக்கு செலுத்தியுள்ளது. இதன் சட்ட ரீதியான பணிகளாக 2023 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க கொழும்பு துறைமுக நகர விதிமுறைகள் (சுங்கம் –விடுவிப்பு செயற்பாடுகள்) உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டன.

VI. அவ்வாறே இலங்கை பாராளுமன்றம் மூலம் கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவால் முன்மொழியப்பட்ட மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த தொழில்முயற்சிகளாக (BSI) பெயரிடப்பட்டுள்ள தொழில்முயற்சிகளுக்கான விடுவிப்புக்கள் அல்லது ஊக்குவிப்புக்களை வழங்குவதற்கான வழிகாட்டல்கள் அங்கீகரிக்கப்பட்டன. இது 2023 ஆகஸ்ட் 04 ஆம் திகதிய 2343/60 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டது.

- **அரச தொழில் முயற்சிகளின் மறுசீரமைப்பு**

2017 முதல் 2022 வரை 5 ஆண்டு காலத்திற்குள் உபாய வழிமுறையாக இனம் காணப்பட்டுள்ள 52 அரச தொழில் முயற்சிகள் 443 பில்லியன் ரூபாய் நட்டமடைந்துள்ளன. அரச தொழில் முயற்சிகளில் தெரிவுசெய்யப்பட்ட தொழில் முயற்சிகள் (08) தொடர்பில் மறுசீரமைப்புகளைக் கொண்டுவருவதனை நோக்கமாக கொண்டு பொதுமக்களுக்கு நியாயமான விலையில் தரமான பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குதல், கூடுதலான முதலீடுகளைக் கவரும் போட்டித் தன்மை நிறைந்த வணிகச் சூழல் ஒன்றை உருவாக்குதல் மற்றும் அந்த தொழில்முயற்சி காரணமாக அரசுக்கு சுமப்பதற்கு நேரிடும் நிதி ரீதியான சுமையினைக் குறைப்பதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் கீழ் மீள்கட்டமைக்கும் பிரிவு தாபிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

இவற்றுள் 7 அரச தொழில்முயற்சிகள் தொடர்பில் அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது. நிர்வாக கம்பனிகள் பதிவுசெய்யப்பட்டு கொடுக்கல் வாங்கல் ஆலாசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன் 3 அரச தொழில் முயற்சிகள் தொடர்பில் ஆர்வம் வெளிக்காட்டுதல்கள் (EOI) கிடைக்கப்பெற்றுள்ளன.

- **மின்சக்தி மற்றும் வலுசக்தி துறையின் மறுசீரமைப்பு**

I. சேவை வழங்கலின் நிதிசார் பேண்தகு தன்மையை உறுதிசெய்வதற்கான மீளமைக்கப்பட்ட விலையை நடைமுறைப்படுத்தல். எரிபொருள் விலை சூத்திரம், இறுதி பரிசீலனை மின்சார கட்டணத்தை சீராக்குதல் மற்றும் மின்சார நிவாரண உதவியை சரியாக அளவீடு செய்வதற்கு கையிருப்பு வழங்கல் கணக்கினை (BSTA) அபிவிருத்தி செய்தல் பான்ற செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

II. வலுசக்தி துறை தொடர்பாக போட்டித் தன்மையை ஏற்படுத்துவதன் ஊடாக வலுசக்தி பாதுகாப்பை உறுதிசெய்தல்; அனைத்து தொழில்முயற்சித் துறைகளும் உள்ளடங்கும் வகையில் துறை தொடர்பான போட்டித் தன்மையை அதிகரிப்பதற்காக 2022 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க பெற்றோலிய உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம் நிறைவேற்றப்பட்டது. எரிபொருள் விநியோகம் தொடர்பில் மேலும் வழங்குனர்களை அறிமுகம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (Sinopec Fuel Oil Lanka (Private) Limited , United Petroleum, Shell PLC - RM Parks). இதன் கீழ் சினொபெக் கம்பனி 2023 ஆகஸ்ட் மாத ஆரம்பம் முதல் இந்த நாட்டில் தனது செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது.

- **காலநிலை சவால்களுக்கு முகம் கொடுத்தல்**

குறைவான காபன் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு பச்சைவீட்டு வாயுவை முகாமை செய்தல் மற்றும் கண்காணித்தல், காலநிலை மாற்றங்களின் பாதகமான தாக்கங்களுக்கு ஒத்திசைவடைதல், காலநிலை மாற்றம் தொடர்பான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் மற்றும் காலநிலை மாற்றங்கள் தொடர்பான நிதி, கருத்திட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்ட மேற்பார்வை மற்றும் வசதிகள் வழங்குவதற்காக தேசிய காலநிலை மாற்ற சட்டத்தை திருத்துவதற்கான மேலதிக விடயங்களை உள்ளடக்குவதற்காக

ஏற்புடைய ஆரம்ப தரப்பினர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேலும் காலநிலை மாற்றங்களுக்கான அலுவலகத்தை தாபனமயப்படுத்தலும் காலநிலை மாற்றங்கள் தொடர்பான கொள்கை ஒன்றைத் தயாரிப்பதற்குத் தேவையான பணிகளும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

❖ தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல்மயப்படுத்தலை மேம்படுத்தல்

I. செயற்கை அறிவு தொழில்நுட்பத்தை (AI) பொருளாதார அபிவிருத்தி மற்றும் சமூக முன்னேற்றத்திற்கு பங்களிக்கச் செய்வதற்காக செயற்கை அறிவை (AI) அபிவிருத்தி செய்வதற்கான உபாயவழிமுறைத் திட்டம் ஒன்றைத் தயாரிப்பதற்காக துறைசார் நிபுணர்கள் மற்றும் அரச அலுவலர்களை உள்ளடக்கிய விசேட நிபுணர்கள் குழுவொன்று 2023 யூன் மாதம் சனாதிபதி அலுவலகத்தின் கீழ் நியமிக்கப்பட்டதுடன் இந்த உபாயவழிமுறையுடன் இணைந்ததாக தயாரிக்கப்பட்ட வெள்ளைப்பத்திரம் ஒன்று 2024 மார்ச் மாதம் சமர்ப்பிக்கப்பட்டது. உத்தேச உபாயவழிதுறைத் திட்டம் 2024 மே மாத இறுதியில் சமர்ப்பிக்கப்படவுள்ளதுடன் 2024 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் ஊடாகவும் செயற்கை அறிவு மற்றும் டிஜிட்டல் அபிவிருத்தி தொடர்பான முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

II. டிஜிட்டல் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக டிஜிட்டல் உபாயவழிமுறைகள் (DIGIECON) 2023 ஒக்டோபர் மாதம் முன்னெடுக்கப்பட்டது.

III. டிஜிட்டல் தொழில்நுட்பச் சட்டத்தை தயாரிக்கும் பணிகள் முற்கொள்ளப்பட்டு வருவதுடன் சட்டம் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் தரவுப் பாதுகாப்பு அதிகார சபை ஒன்றை தாபித்தல், இலத்திரனியல் முறை மூலமாக பணம் செலுத்தப்படுவதை மேம்படுத்தல், வரி முகாமைக்காக டிஜிட்டல் தளத்தைத் தயாரிப்பதற்கு உதவுதல், அறுவடைக்குப் பின்னரான விரயத்தைக் குறைப்பதற்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை விஸ்தரித்தல் ஆகியவற்றுக்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளன

❖ காணி மறுசீரமைப்பு

முதலீடுகளைக் கவர்வதற்கு உதவும் மற்றும் எளிதாக்கும் காணிக் கொள்கை ஒன்று இல்லாதமை காரணமாக காணிகளை இனம் காண்பதில் மற்றும் கையேற்பதில் அல்லது குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதில் சிக்கல்கள் மற்றும் தாமதங்கள் நிகழுகின்றன. அவ்வாறான சிக்கல்களைத் தவிர்க்கும் நோக்கில் புதிய காணி எடுத்தல் சட்டமூலும் ஒன்றை அறிமுகம் செய்தல், தேசிய காணி ஆணைக்குழுவை தாபிப்பதற்கான ஆரம்ப வரைவை தயாரித்து அமைச்சரவைக்கு அனுப்புதல், காணி பாராதீனப்படுத்தும் ஆரம்ப நடவடிக்கைகளை பிரதேச செயலாளர்கள் ஊடாக மாத்திரம் மேற்கொள்ளல் மற்றும் அரச காணி றம்பிக்கைப் பொறுப்பை தாபித்தல் தொடர்பான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் இப்பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

❖ விவசாய நவீனமயப்படுத்தல்

I. விவசாய நவீனமயப்படுத்தல் உபாயவழிமுறைச் சட்டகம் ஒன்று 16 கருப்பொருளின் கீழ் தயாரிக்கப்படுவதுடன் 25 ஆண்டு காலத்திற்குள் அது மூன்று கட்டத்தின் (கட்டம் I - 2023-2028, கட்டம் II- 2029-2038, கட்டம் III - 2039-2048) கீழ் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதற்கான கொள்கை வரைவுக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அந்த வேலைத்திட்டத்தை கூடுதல் முன்னுரிமை மற்றும் மிகச்சிறந்த ஒருங்கிணைப்புடன் நடைமுறைப்படுத்துவதற்காக சனாதிபதி அலுவலகத்தில் தாபிக்கப்படவுள்ள விவசாய நவீனமயப்படுத்தல் செயலகத்துக்கான

உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

II. தற்போது பால் உற்பத்திக் கைத்தொழிலில் நிலவும் குறைபாடுகள் மற்றும் இறக்குமதியில் தங்கியிருக்கும் நிலைமையில் இருந்து தன்னிறைவு நிலைமைக்கு பரிமாற்றம் செய்வதற்கு இயலுமானவாறு இந்திய அரசுடன் அரச-அரச(G2G) ஒத்துழைப்பு சட்டகம் ஒன்றின் கீழ் தெரிவு செய்யப்பட்ட NLDB பண்ணைகளில் செயற்பாடுகளை அதிகரித்து வர்த்தக ரீதியான தொழில் முயற்சி ஒன்றை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் இது தொடர்பாக இந்திய அரசுடன் இணைந்த பிரகடனம் ஒன்று 2023 யூலை மாதம் 21 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது.

III. விவசாய துறையை நவீனமயப்படுத்தல் தொடர்பான தேசிய கொள்கைச் சட்டகத்தை தயாரித்தல் மற்றும் அதற்கான நிபுணத்துவ குழுவொன்றை நியமித்தல்; நடைமுறைப்படுத்துவதற்கான பொறிமுறை தயாரிக்கப்பட்டுள்ளதுடன் 15 வகையான பயிரினங்கள் மூலமான வழித்தட வரைபட திட்டம் (Road Map) தயாரித்தல் தொடர்பாக நிரல் அமைச்சின் செயலாளரின் தலைமையில் தாபிக்கப்பட்ட உபகுழுவின் அறிக்கை மீளாய்வு செய்தல் மேற்கொள்ளப்படும்.

IV. கறுவாக் கைத்தொழில் தொடர்பான புதிய திணைக்களம் ஒன்றை தயாரித்தல் தொடர்பாக 2023.08.14 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மான இலக்கம் ஸ 23/1501/601/05 மூலம் கறுவாக் கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- **இலங்கையை வருடம் பூராக செயற்படும் சுற்றுலாப் பயண முடிவிடமாக மாற்றுதல்**

I. சுற்றுலாப் பயணிகளின் வருகையை 2 மில்லியன்களாக அதிகரித்து 5 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் வருமானம் ஈட்டுதல் இந்த நாட்டின் சுற்றுலா தொழில் முயற்சியின் பிரதான இலக்காக காணப்படுகிறது. இங்கு இந்தியா, ரஷ்யா, ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி, பிரான்ஸ் மற்றும் சீனா உள்ளிட்ட ஒன்பது பிரதான சந்தைகள் மீது கவனம் செலுத்தப்படுவதுடன் ஜப்பான், கொரியா, ஜோஜியா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் கிழக்கு ஐரோப்பா நாடுகள் போன்ற புதிய சந்தைகளைக் கைப்பற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. சனாதிபதி அலுவலகத்தின் கீழ் நியமிக்கப்பட்ட சுற்றுலாக் கொள்கை குழுவினால் பேண்தகு சுற்றுலா தொழில்முயற்சி ஒன்றை தாபிப்பதற்கான தேசிய சுற்றுலா கொள்கை மற்றும் மூலோபாய திட்டத்தை தயாரித்து அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இதற்காக அனைத்து தரப்பினர்களதும் கருத்துக்களைப் பெற்றுக்கொள்வதற்காக அமைச்சரவை மூலம் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

II. நுவரெலியா சுற்றுலா பிரதான திட்டம் தயாரிக்கும் குழு (Committee to expedite the preparation of the Nuwara Eliya Tourism Development Master Plan)மூலம் பிரதான திட்டம் தயாரிக்கும் பணிகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது.

2.1.1.3 இலங்கைப் பொருளாதாரத்தின் போட்டித் தன்மையை அபிவிருத்தி செய்தல்

பொருளாதாரத்தை வழமை நிலைக்கு கொண்டுவருவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள கடும் நடவடிக்கைகளின் கீழ் அபிவிருத்தி மேம்பாட்டு சக்திகளை பாரியளவில் வலுப்படுத்துவதற்கு அரசு எதிர்பார்க்கிறது.

❖ **சாதகமான முதலீட்டுச் சூழலை உருவாக்குதல்**

முதலீட்டாளர்களுக்குச் சாதகமான ஒரு சூழலை உருவாக்குவதற்காக பெரும்பாக பொருளாதார மட்டத்திலான துவங்கள்கள் மற்றும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதே நேரம் குறைந்த செலவில் – குறைந்த காலத்தில் – இலகுவான நடைமுறைகளின் கீழ் தேவையான சேவைகளை வழங்குவதற்காக ஏற்புடைய செயன்முறைகளை இலகுபடுத்துவதற்காக மற்றும் நிறுவனங்கள் மிகவும் வெளிப்படைத் தன்மையுடன் நடவடிக்கை மேற்கொள்வதற்கான செயன்முறைகளை மேம்படுத்துவதன் ஊடாக தொழில் முயற்சிகளுக்கு செயலூக்கமான ஒரு சூழலை (Business Enabling Environment) உருவாக்குவதற்கு அரசால் சாதகமான பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

தொழில்முயற்சி ஒன்றை ஆரம்பித்தல், தொழில்முயற்சி ஒன்றை நடாத்திச் செல்லல் மற்றும் தொழில்முயற்சி ஒன்றை விஸ்தரித்தல் ஆகிய ஒவ்வொரு கட்டத்திலும் பொருத்தமான கட்டாய சேவைகள் தொடர்பில் செயற்படும் பல்வேறு தொழில்முயற்சி வசதிகளை வழங்கும் 54 அரச நிறுவனங்களை உள்ளடக்கிய பின்வரும் எட்டு செயலணிக் குழுக்களாகத் தொகுத்து முன்னுரிமை அடிப்படையில் நிறுவன முறைமைகளை அபிவிருத்தி/ மறுசீரமைப்பு செய்தல் தொடர்பான செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

I. தொழில்முயற்சி ஒன்றை ஆரம்பித்தல்; கம்பனிப் பதிவாளர் திணைக்களத்தின் சேவை வழங்குதலை துரிதப்படுத்தல் தொடர்பாக ஏனைய நிறுவனங்களுடன் தொடர்புபடுத்துவதற்கு ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கைச்சாத்திடல். இலத்திரனியல் கம்பனிகளை பதிவு செய்யும் முறைமையின் (e-ROC) செயற்திறனை மேலும் அதிகரிப்பதற்கான டிஜிட்டல் ஒப்பமிடும் முறைமை அபிவிருத்தி செய்யப்பட்டு வருகிறது.

II. கட்டுமானச் சான்றிதழ்கள் வழங்குதல்; தற்போது நகர அபிவிருத்தி அதிகார சபை (UDA) மூலம் தாபிக்கப்பட்டுள்ள One Stop Unit ஊடாக கட்டுமானச் சான்றிதழ் வழங்குவதை விரைவுபடுத்தல் மற்றும் அதன் மூலம் கட்டுமாணச் சான்றிதழ் வழங்குவதற்காக ஏற்புடைய ஏனைய நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடலை துரிதப்படுத்தல், கட்டுமாணச் சான்றிதழ் வழங்குதல் தொடர்பான ஏனைய நிறுவனங்களுக்கு One Stop Unit வசதிகளை வழங்குவதற்காக கலந்துரையாடுதல்.

III. ஆதனம் ஒன்றைப் பதிவு செய்தல்; மேல் மாகாண இறைவரித் திணைக்களம், பதிவாளர் திணைக்களம், நிலஅளவைத் திணைக்களம் மற்றும் கொழும்பு மாநகர சபையால் முன்மொழியப்பட்டுள்ள தகவல் முறைமையை தாபிக்கும் செயன்முறையை துரிதப்படுத்துவதற்காக 106 மி.ரூபாய் ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

IV. தேச எல்லை ஊடாக வியாபாரம் செய்தல்; தேசிய வியாபார வசதியளிக்கும் குழுவை (NTFC) முறையான மேற்பார்வை அமைச்சு ஒன்றின் கீழ் தாபிப்பதற்கான நடவடிக்கைகளைத் திட்டமிடல் மற்றும் தேச எல்லை ஊடாக வியாபாரம் மேற்கொள்வதை எளிதாக்கும் இலக்குகளுக்கு மீண்டும் முன்னுரிமை அளிப்பதற்குத் தேவையான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

V. கடன் வசதிகளை வழங்குதல்; கடன் வசதிகளை வழங்குவதை விரைவுபடுத்தல் தொடர்பான சட்டம் இயற்றுவதை துரிதப்படுத்தல்.

VI. வங்கரோத்து நிலையில் இருந்து மீளுதல்; இலங்கை நீதி ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட உபகுழு மற்றும் உலகவங்கியின் ஒத்துழைப்பின் கீழ் தற்போது புதியதொரு சட்டம் (Bankruptcy Law) வரையும் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.

VII. ஒப்பந்தங்களை செயல்வலுப்படுத்தல்; வர்த்தக வழங்குகுளை தீர்க்கும் செயன்முறையினைத் துரிதப்படுத்துவதற்கு புதிய வர்த்தக நீதிமன்றம் ஒன்றைக் கட்டியெழுப்புவதற்காக நீதி, சிறைச்சாலை மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சுக்கு சுமார் 30 மி.ரூபாய் ஒதுக்கீட்டை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

2022-2024 கால எல்லைக்குள் செயற்பாட்டுத் திட்டங்களை ஏற்புடைய நிறுவனங்கள் குறித்தொதுக்கப்பட்ட கால எல்லைக்குள் நிறைவேற்றுதல் தொடர்பில் சனாதிபதி அலுவலகத்தின் கீழ் இச்செயலணி மூலம் நுணுக்கமாக மேற்பார்வை செய்யப்படும்.

❖ **தொழிற் சந்தை மறுசீரமைப்பு**

I. சேவை வழங்குணர் – ஊழியர்கள் மற்றும் பொருளாதாரம் ஆகிய இரண்டு பிரிவினருக்கும் நன்மைபயக்கும் வகையில் புதிய, இற்றைப்படுத்தப்பட்ட மற்றும் ஒன்றிணைந்த தொழிற் சட்டம் ஒன்றை செயல்வலுப்படுத்தல் தொடர்பான ஆரம்ப வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது.

II. தனியார் துறையின் ஊழியர்களுக்கான சுகாதார காப்புறுதித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இடமளிக்கும் 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம் திருத்தப்படவுள்ளது.

III. **புதிய தேசிய கல்விக் கொள்கை ஒன்றை அறிமுகம் செய்தல்**;
கல்வி முறையில் தேவையான மாற்றங்களை இனம் கண்டு அதற்காக குறுங்கால – நடுத்தரகால மற்றும் நீண்டகால கல்வி மறுசீரமைப்புக்களை இனம் காண்பதற்கு இயலுமானவாறு தேசிய கல்விக் கொள்கையினை தயாரிப்பதற்காக கௌரவ சனாதிபதியவர்களின் தலைமையில் 10 அமைச்சர்களை உள்ளடக்கிய அமைச்சரவைக் குழுவொன்று தாபிக்கப்பட்டதுடன் அதற்கு உதவுவதற்காக நியமிக்கப்பட்ட கல்வித் துறையின் அரச, தனியார் மற்றும் அரச சார்பற்ற அனைத்து துறைகளினதும் நிபுணர்களை உள்ளடக்கிய விசேட நிபுணர்கள் குழுவொன்றின் மூலம் இலங்கைக்கான புதிய தேசிய கல்விக் கொள்கை சட்டகம் ஒன்று தயாரிக்கப்பட்டு 2023 ஒக்டோபர் மாதம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அதற்கான அங்கீகாரம் கிடைத்துள்ளது. இப்புதிய தேசிய கல்விக் கொள்கை சட்டகம் பாராளுமன்றத்தின் கல்வி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

IV. திறன் பிரிவின் நிறுவனங்கள் மற்றும் தொழில்சார் தகைமை சட்டகத்தை மீளமைத்தல்; உத்தேச புதிய தேசிய கல்விக் கொள்கை சட்டகத்தின் பிரகாரம் நாட்டின் தொழில் திறமை மற்றும் பயிற்சி மாதிரியை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான மறுசீரமைப்புக்களை பரிந்துரை செய்தல் தனியார் துறையின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கிய ஒரு விசேட குழுவினால் மேற்கொள்ளப்படும்.

❖ **வியாபார தாராளமயப்படுத்தல் மற்றும் சந்தைப் பிரவேசத்தை அபிவிருத்தி செய்தல்**

உள்நாட்டு பொருளாதாரத்துக்கு புத்துயிர் அளிக்கும் அரசாங்கத்தின் பொருளாதார மறுசீரமைப்புத் திட்டத்தின் ஒரு முக்கிய பகுதியாக, ஏற்றுமதி சார்ந்த வெளிநாட்டு நேரடி முதலீட்டை மேம்படுத்துவதற்காக பிராந்திய மற்றும் உலகளாவிய விநியோகச் சங்கிலிகளுக்கான அணுகல் மற்றும் உலகப் பொருளாதாரத்துடன் மீண்டும் இணைதல்

ஆகியவற்றை அரசு இலக்காக கொண்டுள்ளது. அதன் போது,

I. 3 ஆண்டு காலத்திற்குள் இறக்குமதி வரியினை CESS அகற்றுதல் மற்றும் துறைமுக மற்றும் விமான நிலைய வரியினை (PAL) 2023 ஆம் ஆண்டு முதல் 5 ஆண்டு காலத்திற்குள் அகற்றுதல். இதன் முதலாம் கட்டம் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டம், 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க கட்டளை இலக்கம் 2325/06 2023.03.28 ஆம் திகதிய வர்த்தமானப் பத்திரிகை மற்றும் 2023.04..03 ஆம் திகதிய 2326/02 ஆம் இலக்க PAL வர்த்தமானப் பத்திரிகை மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

II. வியாபரங்களை எளிதாக்குதல்

- முன்னுரிமை வியாபார எளிதாக்கல் காரணிகளை நடைமுறைப்படுத்தும் போது மூன்று மாதங்களுக்கு (03) ஒரு தடவை தேசிய வியாபார எளிதாக்கல் குழுவின் (NTFC) செயலாற்றுகையினை கடுமையாக மீளாய்வு செய்தல். துரிதமாக நடைமுறைப்படுத்துவதற்கான வியாபார வசதிகளை செயற்பாட்டுத் திட்டத்தின் செயற்பாடுகளை மீண்டும் முன்னுரிமைப்படுத்தல்.

- நடுத்தர கால தேசிய தனிச் சாளரத்தை (NSW) தாபித்தல்; சர்வதேச வர்த்தக நடவடிக்கைகளின் போது தேச எல்லை வியாபாரத்தின் அடிப்படையில் ஆவணங்கள் மற்றும் தரவுத் தேவைப்பாடுகளை முன்வைப்பதற்காக நடைமுறையில் உள்ள பல்மேடைகள் தனி பிரவேச இடம் ஒன்றுக்கு கொண்டுவரப்படும்.

III. சர்வதேச வர்த்தகம்

அரசு ஏற்றுமதி அதிகரிப்பை நோக்கமாகக் கொண்டு பாரிய மற்றும் வளர்ச்சியடைந்து வரும் பொருளாதாரங்களை இலக்காக கொண்ட பரந்துபட்ட சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்காக தேசிய வர்த்தக கலந்துரையாடல் குழுவொன்றை தாபிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளதுடன் இக்குழுவில் தற்போது இந்தியா, சீனா, அமெரிக்கா, சிங்கப்பூர், பங்களாதேஷ் மற்றும் தாய்லாந்து ஆகிய சந்தைகள் தொடர்பாக மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் தொடர்பான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சனாதிபதி அலுவலகத்தின் வழிகாட்டலுடன் வர்த்தக அமைச்சு, நிதி அமைச்சு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு, வாணிப திணைக்களம், வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களம் ஆகிய நிறுவனங்களின் பிரதிநிதித்துவத்துடன் இப்பணிகள் இடம்பெறுவதுடன் அதனோடு இணைந்ததாக பல்வேறு வர்த்தக/ கைத்தொழில் சபை மற்றும் அமைப்புக்கள் உள்ளிட்ட தரப்பினர்களை அறிவூட்டலும் இடம்பெறும்.

❖ **சர்வதேச வர்த்தக அலுவலகம் (OIT) ;**

சர்வதேச வர்த்தக அலுவலகத்துக்கான சட்டமுறையான சட்டகத்தை (OIT) தாபிப்பதற்குத் தேவையான ஆரம்ப பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளதுடன் சர்வதேச வர்த்தக அலுவலகத்தின் பிரதான கலந்துரையாடல் தரப்பு உள்ளிட்ட 06 உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய பணிட்டொகுதி ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. மேலும் வர்த்தக ஒப்பந்தக்களுக்கான கலந்துரையாடல்களை மேற்கொள்வதற்கு 2022.10.17 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மான இலக்கம் 22/1664/601/020 பிரகாரம் தேசிய வர்த்தக கலந்துரையாடல் குழுவை (NTNC) மீள்தாபித்து 10 உபகுழுக்கள் தாபிக்கப்பட்டதுடன் அந்த கலந்துரையாடல் குழுக்களுக்கு பல்வேறு அரச நிறுவனங்களைப் பிரதிநிதித்துவம் செய்து பணிக்குழாம் நியமிக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம், அக்குழு தொடர்புபட்டு 2023 ஆம் ஆண்டு பின்வரும் கலந்துரையாடல் செயலமர்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

- பண்டங்கள் வர்த்தகம் தொடர்பான உபகுழு: தாய்லாந்து மற்றும் பங்களாதேசுடன் 09
- சேவை வர்த்தகம் தொடர்பான உபகுழு: தாய்லாந்துடன் 03
- முதலீடுகள் தொடர்பான உபகுழு: 09
- தோற்றம் தொடர்பான சட்டம் பற்றிய உபகுழு: 05
- சுகாதாரப் பாதுகாப்பு தாவர பாதுகாப்பு தொடர்பான உபகுழு: 04
- வர்த்தகத்துக்கான தொழில்நுட்பம் சார்ந்த தடைகள் தொடர்பான உபகுழு: 03
- சுங்க நடைமுறைகள் மற்றும் வர்த்தக வசதிகள் தொடர்பான உபகுழு: 01
- வர்த்தக தீர்வுகள் தொடர்பான உபகுழு: 07
- பொருளாதார ஒத்துழைப்பு தொடர்பான உபகுழு: 01

மேற்குறிப்பிடப்பட்ட குழுக்களுக்கு மேலதிகமாக பல்வேறு தரப்பினர்களை ஒருங்கிணைத்தல் மற்றும் கலந்துரையாடலுக்கான வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

- **வர்த்தக ஒப்பந்தங்கள்**

தயாரிக்கப்பட்டு வருகின்ற (on-going) சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களுக்கான பேச்சுவார்த்தைகளை ஒருங்கிணைத்தல் மற்றும் கையொப்பமிடுதலை ஒருங்கிணைத்தல் (CSLFTA, SLTFTA, ETCA) இந்த சுற்றுவட்டப் பேச்சுவார்த்தைகள் சர்வதேச வர்த்தக அலுவலகத்துடன் ஒருங்கிணைந்து நடாத்தப்பட்டன.

- **தாய்லாந்து - இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (SLTFTA);** 2023 ஜனவரி மாதம் தொடக்கம் ஜூன் மாதம் வரை 5 சுற்றுவட்ட பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றதுடன் 2024 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 03 திகதி தாய்லாந்து பிரதமரின் கலந்துகொள்ளலுடன் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.
- **இந்தியாவுடன் பொருளாதார மற்றும் தொழிநுட்ப ஒத்துழைப்புக்கான ஒப்பந்தம் (ETCA)** தொடர்பாக சுற்றுவட்டப் பேச்சுவார்த்தைகள் நடாத்துதல்; இந்த ஒப்பந்தத்தின் 12 ஆவது சுற்றுவட்டப் பேச்சுவார்த்தைகள் ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதி தொடக்கம் நவம்பர் மாதம் 01 ஆம் திகதி வரை இடம்பெற்றது.
- **சீனா இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (CSLFTA);** மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்காக இலங்கைத் தரப்பில் விருப்பம் தெரிவிக்கப்பட்டு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருப்பதுடன் ஆரம்பகட்ட நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன.
- **பங்களாதேஷ் - இலங்கை முன்னுரிமை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (PTA - Bangladesh)**
  மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான அமைச்சரவை அனுமதி 2023.02.27 ஆம் திகதி கிடைத்துள்ளது. 2023.05.29 ஆம் திகதி பண்டங்களுக்கான வர்த்தகம் மற்றும் சேவை வர்த்தகம் தொடர்பான துணைக்குழுக்களுடன் 4 ஆவது சுற்றுவட்ட பேச்சுவார்த்தைகள் நிகழ்நிலை ஊடாக இடம்பெற்றதுடன் 2023.09.20 ஆம் திகதி தொழிநுட்பக் குழுக் கூட்டங்களும் நடைபெற்றன. இதன்படி கோரிக்கைகளுக்கான பட்டியல் தயாரிக்கப்பட்டு செப்டெம்பர் மாதம் 27 ஆம் திகதி பங்களாதேஷஷுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.
- **இந்தோனேசியா - இலங்கை முன்னுரிமை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (PTA - Indonesia)**
  2023.08.29 ஆம் திகதி இந்தோனேசியா இலங்கைக்கான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் சம்பந்தமான கலந்துரையாடல்கள் நிகழ்நிலை ஊடாக இடம்பெற்றன. இலங்கை மற்றும் இந்தோனேசியாவுக்கு இடையிலான கைச்சாத்திடப்பட்டுள்ள ஒருங்கிணைந்த புரிந்துணர்வு அறிக்கை (Joint Statement) கைச்சாத்திடப்படுவதற்குரிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

❖ **இலங்கை – சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (SLSFTA);**
இலங்கை சிங்கப்பூர் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்கு வர்த்தக அமைச்சு மற்றும் வர்த்தக திணைக்களத்துடன் ஒருங்கிணைந்து செயற்படல். இந்த சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தை மீண்டும் அமுல்படுத்துவதற்கான அமைச்சரவை அனுமதி 2023 மே மாதம் 29 ஆம் திகதி கிடைக்கப்பெற்றது.

❖ **பிராந்திய விரிவாக்க பொருளாதார கூட்டாண்மை (RCEP)**
பிராந்திய விரிவாக்க பொருளாதார கூட்டாண்மையுடன் (RCEP) தொடர்புகொள்வதற்காக பூர்வாங்க நடவடிக்கைகளை தயாரித்துக்கொள்வதற்காக 2023 ஆண்டு ஜூன் மாதம் 12 மற்றும் 13 ஆகிய திகதிகளில் ஜாகர்த்தாவில் ஆசியான் (ASEAN) அமைப்பின் தவிசாளருடன் இலங்கைப் பிரதிநிதிகளின் சந்திப்பொன்று இடம்பெற்றது. RCEP அங்கத்துவத்தை பெற்றுக்கொள்வதற்கான அபிலாஷையைத் தெரிவிக்கும் கடிதம் (Letter of Intent) ASEAN தலைவருக்கு 2023.06.28 ஆம் திகதி அனுப்பிவைக்கப்பட்டதுடன் RCEP அங்கத்துவத்தை பெற்றுக்கொள்வதற்கு இலங்கை தயாராக இருப்பதையும் இது சம்பந்தமாக காட்டிவரும் அக்கறை தொடர்பாக RCEP அங்கத்துவத்தைப் பெற்றுள்ள நாடுகளுக்கிடையில் இலங்கைத் தூதரகம் /உயர் ஸ்தானிகர் அலுவலகங்கள் அமைந்துள்ள இந்தோனேசியா, தாய்லாந்து, அவுஸ்திரேலியா, ஜப்பான், நியூசிலாந்து, வியட்னாம், மியன்மார், மலேசியா, சீனா மற்றும் தென்கொரியா ஆகிய நாடுகளின் அதிகாரிகளிடம் ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டுள்ளன. அதேபோன்று பிராந்திய விரிவாக்க பொருளாதார கூட்டாண்மைக்கான (RCEP) ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள 20 அத்தியாயங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக பண்ட வர்த்தகம், புலமைச் சொத்துக்கள், பொருளாதார மற்றும் தொழிநுட்ப ஒத்துழைப்பு, சட்ட நடவடிக்கைகள், அரச பெறுகைகள் கோரல் மற்றும் சேவைகள் மற்றும் முதலீடுகளுக்கான 06 குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பான கூட்டங்களும் இடம்பெற்றன.

❖ **இலங்கை - அமெரிக்க வர்த்தக மற்றும் முதலீட்டு சட்டக ஒப்பந்தம் (TIFA)**

2023 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 18 ஆம் திகதி இலங்கை மற்றும் அமெரிக்காவுக்கிடையிலான வர்த்தக மற்றும் முதலீட்டு சட்டக ஒப்பந்தத்தின் (TIFA) 14 ஆவது சபை அமர்வு இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் உட்பட தூதுக்குழுவின் பங்குபற்றலுடன் கொழும்பில் நடைபெற்றது. இதன்போது இலங்கைத் தரப்பினர் விவசாயம், திறனளவை மேம்படுத்துதல் மற்றும் தொழிநுட்ப ஒத்துழைப்பு, சந்தைக்கான அணுகுமுறை மற்றும் வர்த்தகத்திற்கான தொழிநுட்ப இடையூறுகள் மற்றும் டிஜிட்டல் பொருளாதாரம் ஆகிய தலைப்புகள் ஊடாக முன்மொழிவுகள் /பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டதுடன் அமெரிக்கத் தரப்பினர் முதவலீட்டுக் கொள்கைகள், விவசாயம், சுங்கம் மற்றும் வர்த்தக வசதிகள், புலமைச் சொத்துக்கள் மற்றும் வர்த்தகத்தை மேற்கொள்வதற்கான வசதிகளை வழங்குதல் ஆகிய முக்கிய தலைப்புகள் ஊடாக முன்மொழிவுகள்/பிரச்சினைகள் முன்வைக்கப்பட்டன.

IV. தேசிய உற்பத்தித்திறனுக்கான ஆணைக்குழு

தேசிய உற்பத்தித்திறன் ஆணைக்குழுவொன்றை நியமிப்பதற்கு 2023.08.14 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், அதற்கிணங்க தேவைப்படும் அடிப்படை நகல் வரைவு மற்றும் அதற்கான விடயப்பரப்பினை தயாரிப்பதற்கு தேவைப்படும் தகவல்களை வழங்குவதற்காக நிபுணத்துவக் குழுவொன்று நியமிக்கப்பட்டது. அதற்கமைய தேசிய உற்பத்தித்திறன் ஆணைக்குழுவுக்கான சட்டமூல நகலை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு அனுமதியை எதிர்பார்த்து அந்த சட்டமூல நகலையும் மற்றும் கௌரவ சட்டமா அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சட்டவாக்க

அத்தாட்சிப்பத்திரத்தினையும் அமைச்சரவையிடம் சமர்ப்பித்தல் ஆகிய விடயங்களுக்காக அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளதுடன் ஆணைக்குழுவை நியமித்தல் தொடர்பான சட்டமூல வரைவினை சட்டமா அதிபர் திணைக்களத்திற்கும் மற்றும் இறுதி சட்டமூலம் பாராளுமன்றத்திற்கும் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

உற்பத்தித்திறன் ஆணைக்குழுச் சட்டத்தை சட்டமாக்குதல் மற்றும் முக்கிய பணியாட்டொகுதியினரை நியமித்து உத்தேச ஆணைக்குழுவை நிறுவுதல் ஆகியன 2024 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும். 2024 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட முன்மொழிவில் இதற்கான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

2.1.1.4 அனைத்து இன மக்கள் குழுக்களின் சமூக ரீதியிலான உள்ளடக்கத்தை (Social Inclusiveness) உறுதிப்படுத்துதல்

- **வெவ்வேறு குழுக்களிடையே கருத்தொருமைப்பாட்டை உருவாக்குதல்**

I. **பாராளுமன்றத்தினுள் தேசிய சபையை நிறுவுதல்**

அவ்வந்த அரசியல் கட்சிகளைச் சேர்ந்த பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களைக் கொண்டமைந்த தேசிய சபையின் பெயரால் பாராளுமன்ற செயற்குழுவை அமைப்பதற்கு 2022.09.20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் அனுமதியளிக்கப்பட்டது. இதன் மூலம் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால கொள்கைகளை உருவாக்குவதற்கான வழிகாட்டுதல்கள் மற்றும் பொருளாதார உறுதிப்பாடுகளுக்காக நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சித்திட்டங்களின் போது ஒத்துழைப்புகள் வழங்கப்படுவதுடன் பொருளாதார உறுதிப்பாட்டுக்குரிய குறுகிய மற்றும் நடுத்தர கால நிகழ்ச்சித்திட்டங்களை இனங்காணல் மற்றும் குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால தேசிய கொள்கைகளை வகுக்கும் போது முன்னுரிமைத் திட்டங்களை கண்டறிவதற்காக இரண்டு உப செயற்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. தேசிய சபையின் பாராளுமன்ற உப குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளவாறு சனாதிபதியின் செயலாளரின் தலைமையிலான சிரேஷ்ட உத்தியோகத்தர்களைக் கொண்டமைந்த குழுவின் மூலம் தேசிய கொள்கைகள் ஆணைக்குழுவொன்றை அமைத்தல் தொடர்பான சட்டமூல வரைவுக் குழு அறிக்கை தயாரிக்கப்பட்டு சகல பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

II. **இளைஞர் பாராளுமன்ற சட்டத்தை அறிமுகம் செய்தல்**

தேசிய இளைஞர் பாராளுமன்ற சட்டமூலம் அமைச்சரவை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அமைச்சர்கள் மட்டத்திலான குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், அமைச்சரவையில் முன்வைக்கப்பட்ட திருத்தங்களை உள்ளடக்கிய புதிய சட்டவரைவு அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

- **சமூக வலுவூட்டல், பொறுப்புக்கூறல் மற்றும் வகைகூறல் மற்றும் சமூக பாதுகாப்பு வலையமைப்பை பலப்படுத்துதல்**

புதிய நலன்புரிக் கொடுப்பனவுகள் திட்டத்தினை நடைமுறைப்படுத்துதல் மற்றும் நலன்புரிப் பயன்களைச் செலுத்துவதற்காக குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை கண்டறிவதற்கான புதிய தகுதி அளவுகோல்களைப் பயன்படுத்துதல்.

பயனாளர்களுக்கு உத்தேச நலன்புரி உதவிக் கொடுப்பனவுத் திட்டங்களை வழங்குவதற்காக 2023.04.17 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளதுடன் அவை 2328/13 ஆம் இலக்கத்தையுடைய 2023.04.21 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளது. இந்த பணிகள் முடிவடைந்தவுடன் நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களை மேலும் சிறந்த இலக்குடன் முன்னெடுத்து பயனாளர்களின் வங்கிக் கணக்குகளுக்கு (இலத்திரனியல் வலையமைப்பைப் பயன்படுத்தி) நேரடியாக பணப்பரிமாற்றம் செய்யப்படும். நலன்புரி நன்மைகள் சபையின் மூலம் இப்பணிகளனைத்தையும் முழுமையாக பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

I. அஸ்வெசும சமூக நலன்புரி நிகழ்ச்சித்திட்டம்; அஸ்வெசும சமூக நலன்புரி நிகழ்ச்சித்திட்டத்தில் கொடுப்பனவு மூலோபாய வழிமுறைகள் தொடர்பான அமைச்சரவை ஒப்புதல் 2023.07.31 திகதி வழங்கப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் ஏறக்குறைய 18 மில்லியன் பயனாளர்கள் உள்ளடக்கப்படுவார்கள்.

II. நாடுமுழுவதுமுள்ள குறைந்த வருமானம் பெறும் 28.5 மில்லியன் குடும்பங்களுக்கு

அரிசி விநியோக நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 02 மாதங்களுக்குள் மாதத்திற்கு10 கிலோ அரிசி வீதம் வழங்கப்பட்டது.

III. மக்கள் பிரச்சினைகளை நேரடியாக சனாதிபதி செயலகத்திற்குச் சமர்ப்பிப்பதற்காக சனாதிபதி செயலகத்தில் அவசர தொலைபேசி இலக்கம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

IV. அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் 250 மில்லியன் ரூபா பணம் பிரதேச அபிவிருத்தி வங்கி (RDB) ஊடாக உத்தேச கடன் வழங்கல் திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டு இளம் பெண் தொழில்முனைவோரை ஊக்குவிக்கும் வகையில் கடன் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் முன்னோடி கருத்திட்டமாக தெரிவு செய்யப்பட்ட 200 இளம் பெண் தொழில்முனைவோருக்கிடையில் 50 மில்லியன் ரூபா பணம் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

V. பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2023 ஆம் ஆண்டுக்கான நிதி ஏற்பாட்டுத் தொகை 4 முதல் 16 பில்லியன் ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

- **உண்மைகளைக் கண்டறிதல் மற்றும் நல்லிணக்க பொறிமுறை சட்டமூலம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளதுடன் இடைக்கால செயலகம் நிறுவப்பட்டு பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.**

- **விசேட தேவையுடையவர்களை வலுவூட்டல்**

விசேட தேவையுடையவர்களை வலுவூட்டும் நோக்கத்துடன் பின்வரும் நடவடிக்கைகள் அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

அங்கவீனமுற்றவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டம்; அங்கவீனமுற்றவர்களின் உரிமைகள் பற்றிய ஐக்கிய நாடுகளின் சமவாயத்திற்கு அமைய பொருத்தமான சட்டமூலமொன்றை உருவாக்குவதற்கு அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளதுடன் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளும் அவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

- **உணவுப் பாதுகாப்பு**

உணவுப் பாதுகாப்பு தொடர்பான சனாதிபதி செயலணியின் மேற்பார்வையின் கீழ்;

விஹாரைகள் உள்ளிட்ட பிற மத ஸ்தலங்களில் உள்ள உணவுப் பரிமாற்ற மத்திய நிலையங்களில் அப்பகுதியில் உற்பத்தி செய்யப்படும் மேலதிக உணவுப்பொருட்களை பரிமாறிக்கொள்வதற்கான வசதி வாய்ப்புகளை வழங்குதல்.

குடித்தனத் தரவு (1.7 மி.குடும்பங்கள்) தொகுக்கப்பட்டு, “Food Gate” கணினி உள்ளீடுகளில் பதிவேற்றப்பட்டுள்ளது. தேசிய உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்குப் பிரிவினால் இந்த நிகழ்ச்சித்திட்டம் செயல்படுத்தப்பட்டதுடன் பாதுகாப்பு உயர் அதிகாரியின் கீழ் நிறுவப்பட்ட பசுமை வேளாண்மை செயல்பாட்டு மத்திய நிலையத்தின் ஒத்துழைப்பும் இதற்காகக் கிடைக்கப்பெற்றுள்ளது.

- **வட மாகாண ஒருங்கிணைப்பு**

வட மாகாண ஒருங்கிணைப்பு சிறப்புப் பிரிவு (NPD); நீண்டகால மோதல்கள் காரணமாக வடமாகாணத்தில் வசிக்கும் மக்கள் எதிர்நோக்கும் பிரதான பிரச்சினைகளை கண்டறிதல் மற்றும் தீர்வுகளை வழங்கும் நோக்கில் சனாதிபதி அலுவலகத்தில் விசேட பிரிவு ஒன்று

தாபிக்கப்பட்டது. வடமாகாணத்தின் வவுனியா மாவட்டத்தில் இவ் அலுவலகத்தின் விசேட உப அலுவலகம் ஒன்று தாபிக்கப்பட்டுள்ளதுடன், அந்த அலகை செயற்படுத்துவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தின் கீழ் நல்லிணக்கத்துக்கான அமைச்சரவை உபகுழு மாண்புமிகு சனாதிபதியவர்களின் தலைமையில் தாபிக்கப்பட்டுள்ளது. அமைச்சரவை உபகுழுவின் பணிகளை ஒருங்கிணைப்பதன் மூலம் வடமாகாண மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதே இந்த விசேட பிரிவுக்கு கையளிக்கப்பட்ட பணியாகும்.

I. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கான 21ஆம் நூற்றாண்டின் சமூக - பொருளாதார அபிவிருத்தித் தேவைகளைக் கருத்தில் கொண்டு புதிய அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

II. முப்படைகளிடமுள்ள மக்களுக்குச் சொந்தமாக்கப்படவேண்டிய காணிகளை அடையாளம் காணல் மற்றும் விடுவிப்பது தொடர்பான நடவடிக்கைகள்; யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் தற்போது காணி விடுவிப்பு மற்றும் நில அளவைப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

III. இடம்பெயர்ந்தவர்களின் தற்போதைய நிலைமையை கண்டறிந்து அதற்கேற்ப அவர்களுக்கான வசிப்பிடங்களுக்குரிய பணிகளை மேற்கொள்ளல்.

இதன் கீழ்;

- காணாமல் போனவர்களுக்கான அலுவலகம் (Office for Missing Persons); கிளிநொச்சி, மன்னார், யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு ஆகிய இடங்களில் 384 பரிசீலனைகள் நடத்தப்பட்டுள்ளன.
- இழப்பீடுகளுக்கான அலுவலகம் (Office for Reparations); வடக்கு கிழக்கில் இடம்பெற்ற யுத்த மோதல் காரணமாக காணாமல் போன 1770 பேருக்கு 2023ஆம் ஆண்டு செப்டம்பர் 30ஆம் திகதிக்குள் 770 மில்லியன் ரூபா நிதி நிவாரணம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
- தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்துக்கான செயலகத்தை (Office for National Unity and Reconciliation) நிறுவுதல்

சனாதிபதி நிதியம்

1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட சனாதிபதி நிதியம், வறுமை நிவாரணத்துக்காகவும், கல்வியை அல்லது அறிவை மேம்படுத்துவதற்காகவும், சமயத்தை மேம்படுத்துவதற்காகவும், நாட்டிற்கு சேவை செய்துள்ள ஆட்களுக்கு வழங்கல்கள் அளிப்பதற்காகவும் மற்றும் சனாதிபதியினதும் நிர்வாக குழுவினதும் கருத்துக்களின்படி பொதுமக்களின் நலன்புரி நடவடிக்கைகளை மேற்கொள்வதனை நோக்கமாகக் கொண்டுள்ளது. இதன் கீழ், 2023 ஆம் நிதியாண்டினுள் வறுமையினை ஒழித்தல், நலன்புரி நடவடிக்கைகள், ஏனைய கல்வி நடவடிக்கைகள் மற்றும் சமய நடவடிக்கைகளுக்காக 14.29 மில்லியன் ரூபாய் பணம் வழங்கப்பட்டுள்ளது. அதேபோல், மஹாபொல புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு 1365.01 மில்லியன் ரூபாவும் மற்றும் கல்வி புலமைப்பரிசில்களை வழங்குவதற்காக 153.37 மில்லியன் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், மருத்துவ உதவிகளுக்காக 844.5 மில்லியன் ரூபாவும் நோயாளர்களுக்காக வழங்கப்பட்டுள்ளது.

I. கல்விக்கான புலமைப்பரிசில்களை வழங்குதல்

- 2021(2022) ஆம் ஆண்டுக்கான க.பொ.த.(சா.த.) பரீட்சையில் சித்தியடைந்து க.பொ.த.(உ.த.) பயில்வதற்கு தகைமைகளைப் பெற்றுள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில் உள்ள 3000 மாணவர்களை 100 கல்வி வலயத்திலிருந்து தெரிவுசெய்து ரூ.5000.00 வீதம் உயர் கல்விக்குரிய புலமைப்பரிசில்கள் வழங்கல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது 10 மாதங்களுக்குரிய தவணைப்பணம் செலுத்தப்பட்டுள்ளது.
- 2021/ 2022 ஆம் ஆண்டில் க.பொ.த.(உ.த.) பரீட்சையில் ஒவ்வொரு பாடத்துறையின் கீழும் நாடு முழுவதிலும் சிறந்த திறமைகளை வெளிப்படுத்திய 90 மாணவர்களுக்குரிய பணப்பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

II. மருத்துவ உதவி வழங்குதல்

- சனாதிபதி நிதியத்தின் மூலம் 21 வயதுக்குட்பட்ட பிள்ளைகளுக்கு இந்நாட்டில் மேற்கொள்ளப்படும் கண் சத்திர சிகிச்சைகளுக்காக செலவாகும் தொகையில் 2 இலட்சம் ரூபாவுக்குட்பட்ட தொகையினை செலுத்துதல்.
- இதுவரை புற்றுநோய் சிகிச்சை மற்றும் மருந்துகளுக்கு மட்டுமே ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள் பகுதியளவிலான அரச அல்லது தனியார் மருத்துவமனைகளில் செய்யப்படும் அறுவை சிகிச்சைகளுக்கும் பெற்றுக்கொடுத்தல்

2.2 தொலைநோக்கு

தேசிய பொருளாதார மாற்றுவழிகளைக்கொண்ட வடிவமைப்புக்கு பொருளாதார முடிவெடுத்தல் செயன்முறையினைக் கைக்கொள்ளுதல்

அபிவிருத்தித் தரப்பினரும் கருத்து தெரிவித்துள்ளதற்கிணங்க பொருளாதார நெருக்கடி நிலையிலிருந்து இலங்கை இதுவரை அடையப்பெற்ற முன்னேற்றம் திருப்தியடையக் கூடிய மட்டத்தில் உள்ளது. எனினும் சீரான கொள்கைகள் வகுத்தல் மற்றும் நிறுவனங்கள் ஊடாக வலுவான நிலைபேறு தன்மையினை உறுதிப்படுத்துதல் மற்றும் விசேடமாக, அனைத்து விடயங்களும் உள்ளடங்கும் வகையில் மிகவும் வலுவான வளர்ச்சியைக் காட்டும் மூலோபாய நடவடிக்கைகளை உறுதிப்படுத்துதல் அடுத்தகட்ட தேவையாகும்.

இந்த பொருளாதார அபிவிருத்தி செயற்பாட்டின் போது, சம்பிரதாயபூர்வமாக நாம் பின்பற்றிய மூலோபாயங்களுக்குப் புறம்பாக, விசேடமாக பல்வகைப்படுத்தப்பட்ட பொருளாதாரத்துக்கு ஊக்கமளிக்கும் புதிய உற்பத்திகளுக்கான இயலுமை, அறிவு மற்றும் தொழில்நுட்பத்தைப் பெற்றுக்கொள்ளல் போன்ற புதிய பொருளாதார வழிமுறைகளை இனங்காணுதல் அவசியமாகும்.

நாட்டில் பயன்படுத்தப்படாத மூலவளங்களை உள்வாங்குவதன் மூலம் பொருளாதார உற்பத்தித் திறனை வளர்ச்சியடையச் செய்தல், அதன் மூலம் சிறந்த தரத்திலான அதிக தொழில்வாய்ப்புகளை உருவாக்குவதற்கும், நாட்டை மீண்டும் நிலைபேறான வளர்ச்சிப்பாதையில் இட்டுச்செல்லல் போன்றவற்றை சாதிக்க இயலுமென அரசாங்கம் நம்புகின்றது. அதேபோன்று தொடர்ச்சியான பொருளாதார மற்றும் நிறுவன ரீதியிலான மறுசீரமைப்புகளூடாக போட்டித்தன்மைகளை அதிகரித்தலும் சேவை வழங்கலை மேம்படுத்துதலும் அரசின் முன்னுரிமையான இலக்குகளாகும்.

இதற்காக காலத்துக்குக் காலம் மாற்றடையாத ஓர் குறிப்பிட்ட முறையிலமைந்த பொருளாதார தீர்மானங்களை எடுக்கும் செயற்பாட்டைப் பின்பற்றுவதற்காக மிகவும் சிறந்த தன்மையிலான பொருளாதார நல்லாட்சித் தீர்மானங்களை எடுக்கும் செயற்பாடொன்றை ஸ்தாபித்தல் வேண்டும்.

தேசிய பொருளாதார மாற்றுவழிகளைக்கொண்ட வடிவமைப்பொன்றுக்கான அவசியம்

அரசாங்கத்தினால் 2048 ஆம் ஆண்டு ஆகும்போது இலங்கையை சுபீட்சம் நிறைந்த மக்களினத்திற்குரிய பூரண அபிவிருத்தியினை அடைந்துகொள்வதனை உறுதிப்படுத்துதல் அரசின் நோக்கமாகும். இலங்கையை பூரண அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றும் போது எதிர்வரும் 25 வருடங்களுக்குள் நாடு முன்பிருந்த வகையில் பொருளாதார நெருக்கடிகளுக்கு உள்ளாகுவதை தடுப்பது அரசின் நோக்கமாக இருக்கும்.

இதற்காக, நாட்டில் மீண்டும் பொருளாதார பின்டைவு ஒன்று ஏற்படுவதை தடுப்பதற்கும் நீண்ட கால அடிப்படையில் பேரண்ட பொருளாதார நோக்கங்கள் மற்றும் அபிவிருத்தி இலக்குளை அடைந்துகொள்வதற்காக தற்போதைய அரசாங்கங்களின் தொடர்ச்சியான பங்களிப்பு, மாற்றமடையாத பொறுப்பு மற்றும் பொறுப்புக்கூறல் மற்றும் பொருளாதாரத்தில் முக்கிய மாற்றங்கள் மேற்கொள்ளப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக அந்த செயற்பாட்டினை ஓர் சட்டரீதியான கட்டமைப்பிற்குள் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறான வலுவான சட்ட கட்டமைப்புக்குள் அமைச்சரவையின் அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளை நடைமுறைப்படுத்தும்போது பாராளுமன்றத்தினால் மேற்பார்வை நிர்வாகமொன்றை நடைமுறைப்படுத்தும் பொறிமுறையொன்றை ஸ்தாபிப்பதற்கு அரசு எதிர்பார்க்கின்றது. தவறான அரசியல் தீர்மானங்கள் காரணமாக எதிர்காலத்தில் நாட்டில் பரந்த பொருளாதார பின்னடைவுகளுக்கு காரணமாகும் பின்னனிகள் மீண்டும் ஏற்படுவதை தடுப்பது இதன் முக்கிய நோக்கமாகும்.

இதன்போது அரசாங்கத்தினால்-

- உலகலாவிய ரீதியில் தொடர்ச்சியாக நடைபெறுபவை; தொழில்நுட்பத்தின் வளர்ச்சி, மாற்றமடையும் மக்களின் அபிப்பிராயங்கள் மற்றும் அதிகரித்துவரும் சூழல் சவால்கள் என்பவற்றின் காரணமாக உலகளாவிய பொருளாதார பின்னனியில் துரிதமாக இடம்பெறும் மாற்றங்கள்,
- நிலைபேறான அபிவிருத்தியை மேம்படுத்தல், செழிப்புத்தன்மையை ஏற்படுத்தல், உற்பத்தித் திறனை அதிகரித்தல், சமூக மேம்பாட்டை ஏற்படுத்தல் மற்றும் அனைத்து பிரஜைகளுக்கும் சமனான வாய்ப்பினை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்துவதன் முக்கியத்துவம்,
- பொருளாதார வளர்ச்சியை முன்னெடுக்கும் போது தொழில் வாய்ப்புகளை உருவாக்கும் போது மற்றும் புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியை மேம்படுத்தும் போது முதலீடுகளில் இருக்கும் தீர்க்கமான வகிபாகம்,
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியிலான இருவகை முதலீட்டாளர்களுக்கு நியாயமான முறையில் மற்றும் சமனான முறையில் வாய்ப்புகள் வழங்கப்படுவதனை மேம்படுத்தும் வெளிப்படைத் தன்மையுடன் கூடிய முழுமையான மற்றும் சட்டத்தை அடிப்படையாகக் கொண்ட கட்டமைப்பு மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு இலங்கை அர்ப்புணிப்படன் செயற்படுவதை உறுதிப்படுத்துதல் வேண்டும் என்பது,
- பொருளாதார வளர்ச்சி, போட்டித்தன்மை என்பவற்றை மேம்படுத்தல் மற்றும் அதற்கான பொருளாதாரங்களை உலக சந்தையுடன் ஒருங்கிணைப்பதற்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்கான உந்துசக்தியாக சர்வதேச வர்த்தகத்தில் காணப்படும் முக்கியத்துவம்,
- முதலீடுகள், விரிவான சந்தை வாய்ப்புகள் மற்றும் வர்த்தக ஒப்பந்தங்கள் தொடர்பான இணக்கப்படுகளுக்கு சாதகமான சூழல் ஒன்றை வழங்கும் மற்றும் பொருளாதார வளர்ச்சியை மலரச் செய்வதற்காக ஏற்றுமதி-இறக்குமதி செயற்பாடுகளுக்கு வசதிகளை வழங்கும் சட்டங்களை உருவாக்குவதற்கான கட்டாயத் தேவைகள்,
- உலகலாவிய சவால்களை எதிர்கொள்ளக்கூடிய வகையில் பரஸ்பர பயன்களை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகளை வழங்குவதற்கான சர்வதேச ஒத்துழைப்புக்கு இலங்கை அர்ப்பணிப்புடன் செயற்படுமென்பதனை மீண்டும் உறுதிப்படுத்துதல்.

மேற்கூறிய இயல்புகள் தொடர்பாக கூடிய கவனம் செலுத்துதல் மற்றும் அவற்றுள் துறைசார் முக்கியத்துவம் மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக ஓர் பொதுவான இணக்கப்பாட்டுக்கு வருதல் என்பன அவற்றின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

பொருளாதார மாற்றங்களுக்கான சட்டத்தை (Economic Transformation Law) அறிமுகப்படுத்துதல்

மேற்கூறிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எதிர்வரும் 25 வருடங்களுக்குள் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்த வேண்டியவற்றை தேசிய மாற்றங்களுக்கான வரைபடத்துக்குள் கொள்கை ரீதியாக இலங்கை பாராளுமன்றத்தின் பொறுப்பு கூறலை உறுதிப்படுத்துவதற்காக பொருளாதார மாற்றத்திற்கான சட்டமொன்று **(Economic Transformation Law)** வலுவடையச்செய்தல் வேண்டும். இந்த நோக்கங்களுடன் தயாரிக்கப்பட்ட பொருளாதார மாற்றத்துக்கான சட்டமூல நகல் 2024.05.13 ஆம் திகதி அமைச்சரவையினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக அனுமதிக்கப்பட்டு வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டு 2024.05.21 ஆம் திகதி பாராளுமன்ற அவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பிரதான நோக்கங்கள்;

1. போதிய அளவிலான உணவு, பானங்கள், ஆடைகள் மற்றும் வதிவிடங்கள், உட்பட வாழ்க்கையில் அடிக்கடி இடம்பெறும் வளர்ச்சிகளும், ஓய்வு, சமூக மற்றும் கலாச்சார ரீதியிலான வாய்ப்புகள் ஆகியவற்றை உரிய வகையில் பயன்படுத்திக்கொள்ளல் ஊடாக போதிய அளவிலான வாழ்க்கைத் தரத்தை சகல பிரஜைகளுக்கும் மற்றும் தமக்கும் தனது குடும்பத்தின் உறுப்பினர்களுக்கும் கிடைக்கச் செய்வதற்கான வழிவகைகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும்

2. அரச துறை மற்றும் தனியார் துறையினரின் பொருளாதார செயற்பாடுகள் மூலம் அவ்வாறான பொருளாதார செயற்பாடுகளை நாட்டின் சமூக நோக்கங்கள் மற்றும் பொதுவான வளர்ச்சியை நோக்கி வழிநடத்தல் மற்றும் ஒருங்கிணைத்தலுக்காக பொறுத்தமான திட்டங்களை வகுத்தல் அதற்கான ஆட்சி முறையினை சட்டத்தினால் உறுதிப்படுத்துவதன் மூலம் முழு நாட்டிலும் துரிதமான அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கும் மற்றும்

3. பொருளாதார நெருக்கடிகள் ஏற்படுவதனைத் தடுத்தல்

சிறந்த தொலைநோக்கு சிந்தனையுடன் கூடிய பொருளாதார தீர்மானங்களை எடுக்கும் போது அதற்கான வழிகாட்டல் இடம்பெறுவதுடன் அரசின் செயற்பாடுகள் மக்கள் தொடர்பாக பொறுப்புக்கூறுவதனை உறுதிப்படுத்துதல் எதிர்பார்க்கப்படுகிறது. முதலீட்டாளர்களின் நம்பிக்கையை கட்டியெழுப்புதல் மற்றும் நிலைபேறான பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துவதற்குரிய முக்கியமான காரணியான பொருளாதார கொள்கைகளின் நிலைபேறான தன்மை மற்றும் எதிர்வுகூறக்கூடிய ஆற்றல் இதன்மூலம் உருவாகும். பொருளாதார தீர்மானங்கள் நிலையாகவும் நம்பிக்கைத் தன்மையுடனும் எடுக்கப்படுகின்றன என்பதை முதலீட்டாளர்கள் மற்றும் வர்த்தகர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவதனை இது உறுதிப்படுத்தும்.

நீண்டகால மூலோபாய வழிமுறைகளை அணுகுவதன் மூலம் சூழல், சமூகம் பொருளாதாரம் மற்றும் விசேடமாக பல சந்ததியினருக்கு பாதிப்பை ஏற்படுத்தும் பல்வேறு பகுதிகளையும் கவனத்திற் கொள்ளுதல் தொடர்பாக அக்கறையை ஏற்படுத்தும் மிகவும் பயனுள்ள பொருளாதார முகாமைத்துவம் ஒன்றை மேம்படுத்தும். நிகழ்கால மற்றும் எதிர்கால சந்ததியினரின் நன்மைக்காக முன்னுரிமை வழங்கும் தீர்மானங்களை எடுப்பதற்கும் அரசாங்கங்களுக்கு வழிகாட்டும் நிலைபேறான அபிவிருத்தி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் சமூக நலன்புரிகள் என்பன முக்கியத்துவம் வாய்ந்தவையாகும். நிகழ்கால மற்றும் எதிர்கால சந்ததியினரின் நல்வாழ்க்கைக்கு முன்னுரிமை வழங்கும் தீர்மானங்களை எடுப்பதற்கு அரசுக்கு வழிகாட்டும் நிலைபேறான அபிவிருத்தி, சூழல் பாதுகாப்பு மற்றும் சமூக நலன்புரிக்கான ஏற்பாடுகள் இதில் உள்வாங்கப்படும்.

சர்வதேச நாணய நிதியம் உட்பட ஏனைய தரப்பினர்களுடன் கொள்கை ரீதியாக இணக்கப்பாட்டுக்கு வந்துள்ள கோட்பாடுகள்/நிபந்தனைகள் பொருளாதார மாற்றத்துக்கான சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. நீண்ட கால அடிப்படையில் அரசாங்கம் பொருளாதார ரீதியாக முன்னெடுக்க வேண்டிய மாற்றங்கள் மற்றும் அவற்றை வழிநடத்தும் விடயங்கள் இந்தக் கொள்கை கட்டமைப்புக்குள் உள்ளடங்குகின்றன.

பொருளாதாரம் மாற்றம் தொடர்பான தேசிய கொள்கைத் திட்ட அடிப்படைக் கோட்பாடுகளுக்கமைய அரசாங்கத்தினால் செலுத்தப்பட வேண்டிய கடன் மறுசீரமைப்பு நடவடிக்கையின் போது பின்வருமாறு அதற்கான செய்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

i. மொத்தத் தேசிய உற்பத்திக்கு அரச கடன் வீதம் 2032 ஆண்டாகும் போது மற்றும் அதற்குப் பின்னர் அது நூற்றுக்கு தொன்னூற்றைந்து சதவீதமாக குறையும் வகையில்
ii. மொத்தத் தேசிய உற்பத்தியில் மத்திய அரசாங்கத்தின் வருடாந்த சராசரி நிதி வழங்கலின் தேவைகளுக்கான விகிதாசாரம் 2032 ஆம் ஆண்டாகும் போது மற்றும் அதன் பின்னர் நூற்றுக்கு பதின்மூன்று சதவீதத்திற்கும் குறையுமாறு மற்றும்

iii. மொத்தத் தேசிய உற்பத்தியில் மத்திய அரசாங்கத்தின் வருடாந்த கடன் செலுத்தும் விகிதாசாரம் 2027 ஆம் ஆண்டாகும் போது மற்றும் அதன் பின்னர் நூற்றுக்கு நான்கு தசம் ஐந்து சதவீதத்திற்கு குறையும் வகையில் இருக்குமாறு

இதற்கு மேலதிகமாக, இலங்கை ஆகக் கூடிய மட்டத்திலான போட்டி நிலைமையுடன் கூடிய ஏற்றுமதி சார்ந்த டிஜிட்டல் பொருளாதாரமாக மாற்றியமைப்பதற்காக-

i. போட்டித்தன்மையை அதிகரிப்பதற்காக தேசிய பொருளாதார பல்லினத்தன்மையை ஏற்படுத்துதல் மற்றும் கட்டமைப்பு ரீதியில் கடுமையான மாற்றங்களை செய்தல்.
ii. 2025 ஆம் ஆண்டாகும் போது தேறிய பாதீட்டு பற்றாக்குறை Net Zero - மீதியினை அடைந்திருத்தல்.
iii. உலகலாவிய பொருளாதாரத்துடன் இணைவதை அதிகரித்தல்
iv. நிலைபேறான பேரண்டப் பொருளாதார சமநிலை மற்றும் நிலைபேறான கடன் நிலைகளை அடைந்துகொள்ளுதல்
v. விவசாயிகளின் உற்பத்தித்திறன், விவசாயிகளின் வருமானம் மற்றும் விவசாய ஏற்றுதிகளை அதிகரிக்கக் கூடிய வகையில் விவசாயத்துறையினை நவீனமயப்படுத்தல்
vi. பூரணமான பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக மேம்பாட்டை ஊக்குவிப்பதற்காக அரசாங்கம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

மேலும், பின்வரும் இலக்குகள் அடிப்படையில் பொருளாதார மாற்றத்துக்கான தேசியக் கொள்கைத்திட்டம் பொறுப்புக் கூறவேண்டிய அமைச்சரவையிடம் கையளிக்கப்படும்.

i. மொத்தத் தேசிய உற்பத்தியில் அதிகரிப்பு – 2027 ஆம் ஆண்டாகும் போது வருடாந்தம் 5%வீதத்தை அடைந்துகொள்ளல்: மற்றும் அதன் பின்னர் 5% சதவீதத்தினை விட உயர் மட்டத்தினைஅடைந்துகொள்ளல்

ii. 2025 ஆம் ஆண்டு தொடக்கம் வேலையின்மையை மொத்த ஊழியப்படையில் 5% வீதத்துக்கும் குறைவான மட்டத்தினை அடைந்துகொள்ளல்

iii. பெண் ஊழியப்படையின் பங்களிப்பு – 2030 ஆம் ஆண்டாகும் போது 40% சதவீதத்துக்கும் குறையாத மட்டத்தினை அடைதல் மற்றும் 2040 ஆண்டாகும் போது அதனை 50% சதவீதத்துக்கும் குறையாத மட்டத்தை அடைந்துகொள்ளல்

iv. கொடுப்பனவு மீதியில் நடைமுறைக்கணக்கின் பற்றாக்குறை வருடாந்த மொத்தத் தேசிய உற்பத்தியில் 1% சதவீத்திற்கு மேற்படாதிருத்தல்

v. மொத்தத் தேசிய உற்பத்தியின் சதவீதமாக பண்டங்கள் மற்றும் சேவைகளுக்கான ஏற்றுமதி – 2025 ஆம் ஆண்டாகும் போது மொத்தத் தேசிய உற்பத்தியில் 25% சதவீதத்துக்கும் குறையாத மட்டத்தை அடைந்துகொள்ளல் - 2030 ஆம் ஆண்டாகும் போது 40% சதவீதத்துக்கும் குறையாத மட்டத்தை அடைந்துகொள்ளல் மற்றும் 2040 ஆண்டாகும் போது 60% சதவீத மட்டத்தை அடைந்துகொள்ளல்

vi. 2032 ஆம் ஆண்டு வரை அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தின் ஆரம்ப மீதி மொத்தத் தேசிய உற்பத்தியில் 2.3% சதவீத மட்டத்திலும் மற்றும் 2032 ஆம் ஆண்டு தொடக்கம் இது மொத்தத் தேசிய உற்பத்தியில் குறைந்த பட்சம் 2% சதவீத மட்டத்தை அடைந்துகொள்ளல்

vii. 2027 ஆம் ஆண்டிலிருந்து அடுத்து வருகின்ற ஆண்டுகளில் அரசாங்கத்தின் வருமானம் மொத்தத் தேசிய உற்பத்தியில் குறைந்தபட்சம் 15% சதவீத மட்டத்தை அடைந்திருத்தல் மற்றும்

viii. 2027 ஆம் ஆண்டாகும் போது தலைக்குரிய வறுமைச் சுட்டெண் 15% சதவீதத்துக்கும் குறைவாக இருத்தல் வேண்டும் என்பதுடன் 2035 ஆம் ஆண்டாகும் போது அது 10% சதவீதத்திற்கும் குறைவடைந்திருத்தல்

பொருளாதார மாற்றம் தொடர்பான தேசிய கொள்கைத் திட்டத்தை வலுவடையச் செய்வதற்காக 2025 ஆம் ஆண்டில் ஆரம்பித்து ஒவ்வொரு 5 வருடங்களுக்கொருதடவை அமைச்சரவையினால் கொள்கைக் கட்டமைப்பு மற்றும் மூலோபாயங்கள் தொடர்பான அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு பொருளாதார கொள்கைகள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினால் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படவேண்டும் என்பதுடன் முதலாவது அறிக்கை 2025 ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

புதிய நிறுவன கட்டமைப்பை நிறுவுதல்

இந்த ஒட்டுமொத்த செயற்பாடுகளும் ஒரு ஒருங்கிணைந்த அணுகுமுறையுடன் அடைந்துகொள்வதற்காக அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு பிரதானமாக பின்வரும் நிறுவனங்களின் பங்கு முக்கியமானதாக இருக்கும்

- இலங்கை பொருளாதார ஆணைக்குழு,
- இலங்கை முதலீட்டு வலயம் (Zone Sri Lanka),
- சர்வதேச வர்த்தக நிறுவனம்,
- தேசிய உற்பத்தித் திறன் ஆணைக்குழு மற்றும்
- இலங்கை பொருளாதாரம் மற்றும் வர்த்தக நிறுவனம்

இந்த நிறுவனங்களை நிறுவுவதற்கான விதிகள் மற்றும் அவற்றின் பங்கு ஆகியவை பொருளாதார மாற்றத்திற்கான சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பொருளாதார மாற்றச் சட்டத்தை அறிமுகப்படுத்தியதன் மூலம், 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டம் மாற்றப்பட்டுள்ளதுடன் இலங்கை முதலீட்டுச் சபைக்குப் பதிலாக இலங்கை பொருளாதார ஆணைக்குழு மற்றும் முதலீட்டு வலயம் (Zone Sri Lanka நிறுவனம்) ஆகியன செயற்படும்.

இந்த புதிய நிறுவன கட்டமைப்பின் மூலம் மேற்கொள்ளப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் முக்கிய விடயங்கள்;

- முதலீடு மற்றும் சர்வதேச வர்த்தகம் மற்றும் முதலீட்டு வலயம் தொடர்பான தேசியக் கொள்கைகளைத் தயாரித்தல் மற்றும் அமைச்சரவைக்கு அவை தொடர்பாக பரிந்துரைத்தல்
- வலுவான முதலீட்டுச் சூழலை உருவாக்குதல் மற்றும் பேணிச்செல்வதுடன் ஏற்றுமதியினை அதிகரித்தல் மூலமாக சர்வதேச வர்த்தகத்தை ஊக்கப்படுத்தக்கூடிய நிலைபேறான நேரடியான வெளிநாட்டு முதலீட்டு வசதிகளை வழங்குதல் மூலமாகவும் இலங்கை குடிமக்களுக்கு வருமான வழிகளை மற்றும் பரந்தளவிலான வேலைவாய்ப்புகளை அதிகரிப்பதற்குத் தேவையான கொள்கையடிப்படையிலான பங்களிப்பை மேற்கொள்ளுதல்.
- விசேடமாக, முதலீட்டாளர்கள், முதலீடு மற்றும் ஏற்றுமதியாளர்களுக்காக தமது வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதனை இலகுபடுத்தும் சூழ்நிலைகளை (business enabling environment) உருவாக்குதலை மேம்படுத்துதல்.
- பண்டங்கள் மற்றும் சேவை ஏற்றமதி மூலம் இந்நாட்டின் இளைஞர் யுவதிகளுக்கு மற்றும் தொழில்வல்லுநர்களுக்கு தரமிக்க தொழில்வாய்ப்புகளை உருவாக்கக்கூடியதும் மற்றும் பொருளாதார முழுவளர்ச்சிக்காக அதிக நன்மைகளை அடைந்துகொள்ளக்கூடிய மூலோபாய முக்கியத்துவமுடைய முதலீட்டுகளை மேம்படுத்துவதற்கு ஊக்கமளித்தல் ஆகியன மீளாய்வுசெய்யப்பட்டு அவை தொடர்பாக அமைச்சருக்கு பரிந்துரைகளை சமர்ப்பித்தல்
- சர்வதேச வர்த்தகத்தை ஊக்குவிக்கும் கொள்கைகளை தயாரிப்பதன் மூலம் அந்நியச்செலாவணி மூலங்களை பல்வகைப்படுத்தலும் மற்றும் ஏற்றுமதி வருமானத்தை அதிகரிப்பதன் மூலம் இலங்கையின் பொருளாதாரத்தை விரிவாக்குவதற்கான கொள்கை ரீதியான ஆரம்பத்தையும்

அதற்கான பங்களிப்பினையும் அமைச்சரவைக்கு சிபாரிசு செய்தல்

- முதலீட்டு வலயங்களை அறிவிக்கும்போது அதற்கான பரிந்துரைகளை செய்தல்.
- அதிக ஏற்றுமதி நோக்கமுடையதும் பொருளாதார பன்முகத்தன்மை மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கு பங்களிக்கும் விதத்தில் பொருளாதாரத்திற்கு வலுவாக பங்களிக்கும் துறைகள் மற்றும் உபதுறைகளுக்கு வெளிநாட்டு நேரடி முதலீட்டை அதிக செயற்திறன் மிக்க மற்றும் இலக்கினை நோக்கி ஈர்த்தல்
- முதலீடு மற்றும் சர்வதேச வர்த்தகம் தொடர்பாக நிறுவனங்களுக்கிடையே கொள்கை ஒத்திசைவு, மூலோபாய சீரமைப்பு மற்றும் சகவாழ்வு ஆகியவற்றை உறுதிபடுத்துதல்
- சர்வதேச வர்த்தக பேச்சுவார்த்தைகளை இலங்கையின் மூலோபாய ஏற்றுமதி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு நோக்கங்களுடன் நேரடியாக இணைப்பதற்கான வலுவான ஊக்குவிப்புகளை உறுதி செய்தல்
- வர்த்தகம்-முதலீட்டு இணைப்பின் (trade & investment nexus) மூலம் எதிர்பார்க்கப்படும் பலன்களை அதிக செயற்திறன் மிக்கதாக வழிநடத்துதல்
- முதலீட்டாளர்களுக்கான தொழில்நுட்ப உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் அபிவிருத்திசெய்தல் போலவே அத்தகைய உள்கட்டமைப்பு வசதிகளை தொழிற்துறை முகாமைத்துவம், வழிநடத்தல் மற்றும் பிராந்திய அபிவிருத்திக்கு தனியார் முதலீட்டாளர்களுக்கு வாய்ப்புகளை வழங்குவதற்கான சுதந்திரத்தினைப் பெற்றுக்கொடுத்தல்
- முதலீடுகள், சர்வதேச வர்த்தகம் மற்றும் ஏற்றுமதிக்காக பெரிதும் பங்களிப்பினை வழங்கும் முதலீட்டு வலயங்களை நிறுவுதல், வழிநடத்தல் மற்றும் முகாமைத்துவம் தொடர்பான தேசியக் கொள்கைகளுக்கு வாய்ப்பளித்தல்,
- முதலீடுகளை மேம்படுத்துவதற்கான பின்னியை அனைத்து முதலீட்டு வலயங்களினால் முன்னெடுத்தலும் அதன் மூலம் தொழில் வாய்ப்புகளை அதிகரித்தலை உறுதிப்படுத்தலும்,
- நாட்டில் பொருளாதார அடிப்படையை பலப்படுத்தும் பிரதான மூலோபாயமாக இலங்கையில் சர்வதேச வர்த்தகத்தை மேம்படுத்தலும் அபிவிருத்தி செய்தலும்
- இலங்கையானது உலகளாவிய வழங்கல் செயற்பாடுகளுடன் பயனுறுதியுடன் இணைவதற்கு நாட்டின் வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பான ஒழுங்குமுறைகளை இலகுபடுத்துதல், ஏற்றுமதி சார்ந்த முதலீடுகளை ஈர்த்தல்.
- தடையற்ற வர்த்தக ஒப்பந்தங்கள் மூலம் உலகளாவிய சந்தை அணுகலை மேம்படுத்துதல் மற்றும் வர்த்தக வசதிகளை மேம்படுத்துதல்
- சர்வதேச வர்த்தகத்திற்கான அலுவலகத்தினால் சந்தைகளில் பிரவேசிப்பதற்கான தடைகளை நீக்குதல் அல்லது குறைத்தல் மற்றும் இலங்கையின் பண்டங்கள் மற்றும் சேவைகளுக்கு சர்வதேச சந்தையில் பிரவேசிப்பதற்கான வசதிகளை செய்துகொடுப்பதன் மூலம் இலங்கை பண்டங்கள் மற்றும் சேவைகளுக்கான ஏற்றுமதியினை மேம்படுத்துதல்.
- இருதரப்பு வர்த்தக உடன்படிக்கைகள் மற்றும் பிராந்திய வர்த்தக ஒப்பந்தங்கள் உட்பட சர்வதேச வர்த்தக நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக நிறுவப்பட்ட உயர்நிலையில் உள்ள அமைப்பாக சர்வதேச வர்த்தகத்திற்கான அலுவலகம் அந்த பணிகளுக்கான அனைத்து நிறுவனங்கள் மற்றும் பங்குதாரர்களுடன் சிறந்த ஒருங்கிணைப்புடன் செயற்படுதல்.
- பொருளாதார ஸ்திரநிலைக்காக மேற்கொள்ளப்படும் சீர்திருத்தங்களினால் கிடைக்கும் நன்மைகளை அதிகரிப்பதற்காகவும் மற்றும் அவற்றின் நிலைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காகவும்; பொருளாதாரத்தின் அனைத்து துறைகளிலும் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல்.

- உற்பத்தித்திறன் தொடர்பான சிக்கல்களை ஆராய்வதற்காக நிறுவப்பட்ட சுயாதீன நிறுவனமொன்றை அமைத்தல் மற்றும் சாட்சியங்கள் மற்றும் தரவுகள் அடிப்படையிலான கொள்கை வழிகாட்டுதல்களை அரசாங்கத்திற்கு பரிந்துரைத்தல்.
- ஆராய்ச்சி மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில் உற்பத்தித்திறன் சிக்கல்களை ஆராய்வதற்கும் உற்பத்திறனை நோக்காகக் கொண்ட பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகள் குறித்து அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல்
- பொருளாதார மற்றும் வர்த்தக அலுவல்கள் மற்றும் கொள்கைகள் பற்றிய கல்வியை பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உத்தியோத்தர்களுக்கு வழங்குதல் தமது விடயத்திற்குரிய கொள்கைகளை உருவாக்குதலின் போது மற்றும் நடைமுறைப்படுத்தும் போது உரிய தரப்பினர்களுக்கு சரியான அறிவினைப் பெற்றுக்கொடுத்தல்.

அதேபோல் 2024 ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்ட முன்மொழிவுகள் மூலம் பொருளாதார வளர்ச்சியை முன்நோக்கிக் கொண்டுச்செல்வதனை நோக்காக்கொண்ட அத்தியாவசிய சீர்திருத்தங்கள் ஆரம்ப முன்னேற்றத்தைக் குறிக்கின்றன. சவால்கள் மற்றும் சந்தர்பத்திற்கேற்றவாறான எதிர்மறைகள் மத்தியிலும் உத்தேச பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் கொள்கைகள் பொருளாதார நிலைபேறுதன்மை நோக்கிய பயணத்தை இலங்கை மேற்கொள்ள உதவும்.

அதேபோல் பொருளாதாரத்தின் பின்வரும், முக்கிய கூறுகளின் விரைவான மாற்றம் எதிர்பார்க்கப்படுகிறது.

கல்வி மறுசீரமைப்புக்கள்

நாட்டின் கல்வித்துறையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக பிரதமர், கல்வி அமைச்சர் உட்பட சனாதிபதி தலைமையில் பத்து பேர் கொண்ட அமைச்சரவை உபகுழுவின் மேற்பார்வையின் கீழ் 25 பேர் கொண்ட புலமை வாய்ந்த புத்திஜீவிகள் குழுவினால் தேசிய கல்விக் கொள்கை கட்டமைப்பு (2023-2033) வகுக்கப்பட்டுள்ளது. கல்வித் துறையின தரம், சமத்துவம் மற்றும் சிறப்பை அடைவதற்கு தேவையான அடிப்படை நோக்கங்கள், மூலோபாயங்கள்; மற்றும் நடவடிக்கைகளை இந்த கட்டமைப்பானது தெளிவாகக் கோடிட்டுக் காட்டுவதுடன் தேசிய அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் கல்வி தொடர்பாக காணப்படும் உலகளாவிய இலக்குகளுடன் இசைந்து செல்லக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த தேசிய கல்விக் கொள்கைக் கட்டமைப்பு (2023-2033) இலங்கையின் கல்வித் துறையின் நிலையான மாற்றத்திற்கான 3 முக்கிய கொள்கை வழிகாட்டல்களை முன்வைத்துள்ளது.

i. கற்றல், கற்பித்தல் மற்றும் உறுதிப்படுத்துவதற்கான விதிமுறைகளை மீளாய்வுசெய்தல்,
ii. நிர்வாகத்துக்குப் பொறுப்புக்கூறும் தரப்பினர் மற்றும் நிறுவனங்கள் மீள்வரைவிலக்கணப்படுத்துதல்,
iii. முதலீடு மற்றும் வளங்களை மேம்படுத்துதல்,

இது பின்வரும் முக்கிய மாற்றங்களைச் செயற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

i. ஆங்கில மொழி மூலக் கல்விக்கான வாய்ப்புகளை விரிவுபடுத்துதல்
ii. புதிய தொழில் உலகத்திற்கு ஏற்ற வகையில் நவீனமயமாக்கப்பட்ட சர்வதேச வரையறைகளின்படி தரப்படுத்தப்பட்ட தேசிய பாடத்திட்டம் மற்றும் மதிப்பீடுகள்
iii. இறுதிப் பரீட்சைகளின் சுமையைக் குறைத்தல் மற்றும் கருத்திட்டங்களை அடிப்படையாகக் கொண்ட மதிப்பீடுகளில் அதிக கவனம் செலுத்துதல்
iv. சான்றுப்படுத்துதல் மற்றும் பயன்களைப் பெற்றுக்கொடுத்தலுக்கான பொறிமுறைகள் மற்றும் ஆசிரியர் சம்பள திருத்தங்கள் அறிமுகம் மூலம் தகுதி வாய்ந்த நபர்களை ஈர்க்கும் ஆசிரியர்

தொழிலின் மாற்றம் - தேசிய ஆசிரியர் நிபுணத்துவ சபையினை நிறுவுதல்.

v. கல்வியின் மாற்றத்திற்கு இடையூறாக இருக்கும் கட்டமைப்பு மற்றும் தரமான காரணிகளை இல்வாதொழிப்பதற்காக கல்வி நிர்வாகத்தை மேலும் பரவலாக்கும் நிர்வாக சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துதல்.

vi. தொழிற்தேர்ச்சி அபிவிருத்திக்கான மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்விக்கான ஆணைக்குழு (TVEC) பதிலாக ஓர் அதிகாரச் சபையாக தேசிய தொழிற்தேர்ச்சி ஆணைக்குழுவை மறுசீரமைத்தல்.

vii. தேசிய மற்றும் மாகாண மட்டங்களில் அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களில் தொழிற்தேர்ச்சி துறையின் திட்டமிடல், ஒருங்கிணைப்பு மற்றும் அபிவிருத்தி, வருடாந்த ஊழியச் சந்தையை வரைவுபடுத்துதல்; தற்போதுள்ள அரசதுறை தொழிற்பயிற்சி வழங்குநர்களை பல்கலைக்கழக அமைப்புடன் இணைந்த கல்லூரி அமைப்பில் ஒருங்கிணைக்க நடவடிக்கை எடுத்தல்; நிபுணத்துவ சபைகளை அமைத்தல் மற்றும் அவை நிறுவப்பட்டுள்ளவாறு அவற்றின் செயற்பாடுகளை கையளிப்பதற்கும் NSC பொறுப்புக்கூறல் வேண்டும்.

viii. தேசிய உயர்கல்வி ஆணைக்குழு (NHEC) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்குப் பதிலாக மாற்றியமைக்கப்படுவதுடன், அந்த நிறுவனம் தேசிய கொள்கைகளுக்கு ஏற்ப உயர்கல்வியை ஒருங்கிணைத்தல் மற்றும் அரசு அல்லாத அல்லது உயர்கல்வி நிறுவனங்களால் வழங்கப்படும் அனைத்து பட்டங்கள் மற்றும் பட்டங்களுக்கு சமமான கல்வித் தரத்தை பராமரிக்கும் பொறுப்பினை ஏற்கும்.

ix. தேசிய தர உத்தரவாதம் மற்றும் அங்கீகார பொறிமுறையானது நிலையான தரத்தை பராமரிப்பதற்காக தேசிய மட்டத்திலான அரசு மற்றும் அரசு சாரா கல்வி நிறுவனங்கள் இரண்டிலும் முன்பள்ளி சிறுவர் கல்வி, பாடசாலைக்கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்தேர்ச்சி அபிவிருத்தி ஆகியவற்றிற்கான ஒருங்கிணைந்த தர உத்தரவாதம் மற்றும் அங்கீகாரத்தை வழங்கும்.

x. கல்வியின் அனைத்துத் துறைகளிலும் அரசு-தனியார் கூட்டாண்மை உட்பட அரசு சாரா பங்காளர்களின் பங்களிப்பை எளிதாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

xi. அரசதுறை கல்வியில் மேற்கொள்ளப்படும் முதலீடுகளை மேலும் தாற்பரியமான முறையில் மேற்கொள்ளல்.

xii. (அ) ஒரு ஆராய்ச்சி கலாச்சாரத்தை உருவாக்குதல் (ஆ) கற்பித்தலில் புதுமைகளை அறிமுகப்படுத்துதல் (இ) கல்வியில் டிஜிட்டல் மாற்றம் (ஈ) கைத்தொழில் துறையுடன் ஒருங்கிணைதல் மற்றும் (இ) சர்வதேச உறவுகளுக்கான போட்டித்தன்மையிலான மானியங்களை வழங்குதல் மற்றும் /அல்லது கல்வி நிறுவனங்களுக்கான ஊக்குவித்தல்களை உருவாக்குவதற்கான பொறிமுறையொன்றை நிறுவுதல்.

உயர்கல்வி மற்றும் ஆற்றல் அபிவிருத்திக்கான வெளிநாட்டு முதலீடுகளுக்குள்ள வரையறைகளை படிப்படியாக குறைத்தல்.

விவசாய நவீனமயமாக்கல்

விவசாய நவீனமயமாக்கல் செயலகம் மூலம் இலங்கையில் விவசாயத் துறையை நவீனமயமாக்குவதையும் மாற்றியமைப்பதையும் நோக்கமாக கொண்ட விவசாய நவீனமயமாக்கல் நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படல் மேற்பார்வை செய்யப்படுகிறது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் விவசாய நவீனமயமாக்கல் மத்திய நிலையங்கள் (Agriculture Modernization Hub) பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் தாபிக்கப்படவுள்ளதுடன் பிரதேச மட்டத்தின் ஆரம்ப கட்டமாக 25 மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட 26 பிரதேச செயலாளர் பிரிவுகளில் முன்னோடிக் கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் இரண்டாம் கட்டமாக ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் 03 பிரதேச செயலாளர் பிரிவுகள் வீதம் 75 பிரதேச செயலாளர் பிரிவுகளில் விவசாய நவீனமயமாக்கல் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் விவசாய நவீனமயமாக்கலுக்கான தேசிய கொள்கைச் சட்டகம் தயாரிக்கப்பட்டு 2024.04.03 ஆம் திகதி மாண்புமிகு சனாதிபதியவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அரச தொழில்முயற்சிகள் மறுசீரமைப்பு

தெரிவு செய்யப்பட்ட அரச தொழில் முயற்சிகளை (08) மறுசீரமைக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பித்து அச்செயன்முறையினை மேற்பார்வை செய்வதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் கீழ் மீள்கட்டமைக்கும் பிரிவு தாபிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதன் ஒருங்கிணைப்பின் கீழ் விமான சேவைகள், புகையிரதம், தொடர்பாடல் உள்ளிட்ட தொழில் முயற்சிகள் தொடர்பில் மறுசீரமைப்புக்களை நடைமுறைப்படுத்தல் 2024 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்படும்.

மின்சக்தி மற்றும் வலுசக்தி துறை மறுசீரமைப்பு

- மின்சக்தி துறையில் மின்சக்தி சட்டம், விநியோக சேவைகள் மற்றும் விநியோகத் துறைகளின் செயற்திறன் மற்றும் உற்பத்தித்திறனை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்ட விரிவான மறுசீரமைப்புக்களுக்கான உத்தேச புதிய மின்சக்தி சட்டத்தை அங்கீகரித்து நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.
- வருடாந்தம் 5% சதவீதத்தால் மின்சாரத்துக்கான கேள்வி அதிகரிப்பதனால் இந்தத் தேவையைப் பூர்த்தி செய்வதற்குப் போதுமான உற்பத்தி இயலளவை அதிகரித்தலானது பேண்தகு உற்பத்திக்கு தடையின்றி தனியார் முதலீடு மூலம் மேற்கொள்ளப்படும். அமைச்சரவையால் விசேட நிபுணர் குழு நியமிக்கப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் சட்ட ரீதியான மற்றும் நிறுவன ரீதியான மறுசீரமைப்புக்கள் ஆய்வு செய்யப்பட்டு பரிந்துரைகள் முன்வைக்கப்படும்.
- இலங்கையின் வலுசக்தி தேவைகளை மீள்புதுப்பிக்கத்தக்க வலுசக்தி மூலங்கள் மீது வழிநடாத்தும் ஒரு முயற்சியாக கிரீன் ஹைட்ரஜனைப் பயன்படுத்துவதற்கான வழித்தட வரைபடத்தை தயாரிப்பதற்கும், சாத்தியக்கூற்று ஆய்வின் பின்னர் 2024 மற்றும் 2026 காலப்பகுதிக்குள் முன்னோடிக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும், 2026 முதல் கிரீன் ஹைட்ரஜனை வணிக ரீதியாக பயன்படுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

பசுமைப் பொருளாதாரம்

அவ்வாறே பேண்தகு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணங்க, தறைசேரியில் காலநிலை நிதிப்படுத்தல் பிரிவு ஒன்றை உருவாக்குவதற்கும், சனானாதிபதி அலுவலகத்தில் காலநிலை மாற்றம் தொடர்பான அலுவலகத்தை உருவாக்குவதன் மூலம் இலங்கையின் காலநிலை செழிப்பு திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு உதவும் நிறுவனக் கட்டமைப்பை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் சர்வதேச காலநிலை மாற்றம் தொடர்பான பல்கலைக்கழகம் மற்றும் காலநிலை மாற்ற ஆணைக்குழு ஈகியன நிறுவப்படவுள்ளன.

டிஜிட்டல்மயப்படுத்தல்

- 2030 ஆம் ஆண்டளவில் டிஜிட்டல் பொருளாதாரத்தை அடைந்துகொள்வதற்காக தொழில்நுட்பம் தொடர்பான நிறுவனக் கட்டமைப்பை மறுசீரமைப்பதற்கு உத்துசிக்கப்பட்டுள்ளதுடன் அரச துறையை டிஜிட்டல்மயமயப்படுத்துவதற்குத் தேவையான தலைமைத்துவம் மற்றும் வழிகாட்டுதலை வழங்குவதற்காக முழு அதிகாரம் கொண்ட டிஜிட்டல் அதிகார சபையினை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

- அவ்வாறே செயற்கை நுண்ணறிவை அடிப்படையாக கொண்ட பொருளாதார மற்றும் சமூக மாற்றத்தை உருவாக்கும் நோக்கத்துடன் செயற்கை நுண்ணறிவு தொடர்பான தேசிய மத்திய நிலையம் ஒன்று தாபிக்கப்படும்.

- இதற்கு மேலதிகமாக அரச துறை, நிபுணத்துவ நிறுவனங்கள் மற்றும் சிவில் சமூகம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து தொழில்நுட்ப புத்தாக்கங்களை ஊக்குவிப்பதற்கான தொழில்நுட்ப புத்தாக்க கண்டுபிடிப்பு சபை ஒன்றை தாபிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

விநியோகம்

இலங்கையின் மூலோபாய அமைவிடத்தைப் பயன்படுத்தி அதனை ஒரு விநியோக மத்திய நிலையமாக மாற்றுவதற்கான ஆரம்ப கட்டமாக, அனைத்து தரப்பினர்களுடனும் இணைந்து தேசிய விநியோக கொள்கை ஒன்றைத் தயாரித்து நடைமுறைப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும். இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் நிலத் தொடர்புகளை ஏற்படுத்தல், கொழும்பு தெற்கு துறைமுகத்தின் மூலம் தென்மேற்கு இந்தியாவின் விநியோகத் தேவைகளைப் பூர்த்தி செய்தல், திருகோணமலைத் துறைமுகத்தின் ஊடாக தென்கிழக்கு இந்தியாவின் விநியோகத் தேவைகளைப் பூர்த்திசெய்தல் ஆகியன இதன் நோக்கமாகும். எதிர்காலத்தில் பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்க்கப்படும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் கொழும்புத் துறைமுகத்தின் மேற்கு முனையமும் 2030 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கொழும்பு வடக்குத் துறைமுகமும் நிர்மாணிக்கப்பட்ட பின்னர் கொழும்புத் துறைமுகத்தின் இயலளவு மேலும் அதிகரிக்கும்.

மீன்பிடித் துறை

மீன்பிடித் துறையின் உற்பத்தித்திறனை அதிகரித்தல் மற்றும் உயர்வான தரம் கொண்ட மீன்பிக் கைத்தொழிலை மேம்படுத்துவதை அடிப்படையாக கொண்ட மூலோபாயத் திட்டம் ஒன்றைத் தயாரித்து நடைமுறைப்படுத்துவதற்காக விசேட நிபுணர் குழுவொன்றின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சுற்றுலா

ஒரு வருடம் ஒன்றில் குறைந்தபட்சம் 5 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்காக புதிய வடிவிலான நீண்டகால நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்கு தேசிய அளவிலான மற்றும் துணைத் தேசிய அளவிலான நிறுவனங்களை 2024 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

அனைத்துக் இனக்குழுக்களின் மத்தியில் நல்லிணக்கம் மற்றும் சமூக உள்ளடக்கம் உத்தரவாதமளிக்கப்பட்ட ஒரு சமூகம்.

i. **"உருமய" நிகழ்ச்சித்திட்டம்**

தரிசு நிலச் சட்டத்தின் (1897) கீழ், காணி உரிமையை இழந்த விவசாயிகளுக்கு மீண்டும் அக்காணிகளின் முழு உரிமையையும் வழங்கும் வகையில் "உருமய" நிகழ்ச்சித்திட்டத்தை 2024 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தல் ஆரம்பிக்கப்படுவதுடன் அதன் மூலம் எதிர்வரும் சில ஆண்டுகளில் 20 இலட்சம் குடும்பங்களுக்கு காணிபூமிகள் மற்றும் விவசாய நிலங்களின் உரிமை கிடைக்கப்பெறல் உறுதிசெய்யப்படும்.

ii. **வருமானப் பாதுகாப்பை ஏற்படுத்தல்**

நகர்ப்புற வீட்டு உரிமை மற்றும் பெருந்தோட்ட வீடுகள்.

பல்வேறு நகர்ப்புற நிகழ்சித்திட்டங்களின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளின் முழு உரிமையை குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இதன் கீழ் 2024 ஆம் ஆண்டு மாத்திரம் சுமார் 50,000 குடும்பங்களுக்கு வீட்டு உரிமைகள் கிடைக்கப்பெறும். அவ்வாறே பெருந்தோட்ட மக்களுக்கு காணி உரிமைகளை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான பூர்வாங்கப் பணிகள் 2024 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்படும்.

iii. **அஸ்வெசும**

சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களுக்காக முன்னைய ஆண்டுகளில் செலவிடப்பட்ட தொகையை விட மூன்று மடங்கு தொகையை 2024 இல் அஸ்வெசும நிகழ்ச்சித்திட்டத்திற்காக செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன் பயனாளிகளை வலுவூட்டுவதற்காக சமுர்த்தி உத்தியோகத்தர்களின் அனுபவமும் அறிவும் பயன்படுத்தப்படும்.

iv. **மலையக தசாப்தம்**

பல்வேறு காரணங்களால் வளப் பங்கீட்டு ஏற்றத்தாழ்வுகள் காரணமாக மலையகப் பிரதேசங்களில் பொது உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சேவைகளின் முன்னேற்றம் மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரம் ஒப்பீட்டளவில் குறைந்த மட்டத்தில் காணப்படுவதுடன் இதனைத் தவிர்ப்பதற்காக மலையகப் பிரதேசங்களின் கிராமிய அபிவிருத்திக்கு முன்னுரிமை வழங்கும் முக்கியத்துவத்தை இனம் கண்டு சபரகமுவ மற்றும் மத்திய மாகாணம் மற்றும் பதுளை, காலி, மாத்தறை, களுத்துரை மற்றும் குருநாகல் மாட்டம் ஆகியன உள்ளடங்கும் வகையில் மலையகப் பிரதேசங்களின் அனைத்து 89 பிரதேச செலகங்களும் உள்ளடங்கும் வகையில் பத்தாண்டு பலநோக்கு கிராமிய மற்றும் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் ஒன்று 2024 ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.

v. **பெண்களை வலுவூட்டுதல்**

பாலின அடிப்படையிலான வரவு செலவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தவும், அது தொடர்பான சட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தவும், பெண்களை வலுவூட்டுவதற்கான சட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

vi. **இடம்பெயர்ந்த மக்களுக்கு வீடுகள்**

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இன்னமும் வீடற்றுக் காணப்படும் குடும்பங்களுக்கான வீடமைப்புத் திட்டத்தை விரைவுபடுத்துதல், வீடற்று எஞ்சியிருக்கும் குடும்பங்களுக்கு அத்தியாவசிய நிவாரணம் மற்றும் இழப்பீடு வழங்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படும்.

vii. **தேசிய ஜனசபையை தாபித்தல்**

கிராமிய மட்டத்தில் தீர்க்கப்படாத அபிவிருத்தித் தேவைகளைக் கண்டறிந்து அவற்றுக்கு முன்னுரிமை வழங்கி தேசிய மட்டத்தில் வளங்களைப் பங்கீடு செய்யும் செயன்முறையை ஏற்புடைய பிரதேசங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகளின் ஒருங்கிணைப்புடன் நடைமுறைப்படுத்தல், மக்கள் பங்கேற்புடனான முறைசார்ந்த ரீதியில் கூட்டு அபிவிருத்தி முன்னுரிமைகளைத் தீர்மானித்து வளங்களை ஒதுக்குதல் அந்த அபிவிருத்தி முன்னுரிமைகளை அரசுக்கு நேரடியாக சமர்ப்பிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கும் வகையில் தேசிய ஜனசபை முறை ஆரம்பிக்கப்படுவதுடன் அதன் முக்கிய கட்டமாக 2024 ஆம் ஆண்டு ஜனசபைச் செயலகம் தாபிக்கப்படவுள்ளது.

viii. **இளைஞர் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம்**

பல்வேறு அமைச்சுக்fள் மற்றும் அரச நிறுவனங்கனால் இளைஞர்களின் மேம்பாட்டை மையமாக கொண்ட பல நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதுடன் இந்த அனைத்து நிகழ்ச்சித்திட்டங்களையும் ஒருங்கிணைத்து மற்றும் புதிய பொருளாதார மற்றும் சமூக நிலைமைகளுக்கு ஏற்ற புதிய நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளடங்கிய ஒருங்கிணைந்த இளைஞர் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

ஈ எம் எஸ் பீ ஏக்கநாயக்க
சனாதிபதியின் செயலாளர்

அத்தியாயம் 03

3.1 நிதிச் செயலாற்றுகை அறிக்கை

ஏசீஏ-எப்

2023.12.31 இல் ல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

திருத்தப்பட்ட ஒதுக்கீடு 2023 (ரூ.)		குறிப்பு	உண்மை நிலை 2023 (ரூ.)	2022 (ரூ.)	
-			-	-	
-	வருமான வரி	1	-	-	
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-	ஏசீஏ-1
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	
-	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	-	-	
-			-	-	
-			-	-	
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		3,531,014,417	2,574,459,000	ஏசீஏ-3
-	வைப்புகள்		19,653,920	12,913,576	ஏசீஏ-4
-	முற்பணக் கணக்குகள்		65,864,353	35,227,637	ஏசீஏ-5
-	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்		-		
-	**மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)**		**3,616,532,690**	**2,622,600,213**	
-			**3,616,532,690**	**2,622,600,213**	
	திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)		**132,500**	-	
			3,616,400,190	**2,622,600,213**	
	கழி : செலவினம்				
-	**மீண்டுவரும் செலவினம்**		-	-	
916,240,000	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர்	5	914,206,523	661,982,622	
2,377,219,000	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	2,268,677,304	1,334,804,539	
127,041,000	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	88,634,710	196,594,606	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	
100,000	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	10,500	-	
3,420,600,000			**3,271,529,037**	**2,193,381,767**	
	மூலதனம் செலவினம்				
429,000,000	மூலதனச் சொத்துக்களின புணரமைபபும, மேம்படுத்தலும்	10	404,186,792	348,995,333	
139,200,000	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	138,374,673	149,143,452	
3,868,600,000	மூலதன மாற்றல்கள்	12	3,615,517,651	195,458	
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	-	-	
2,600,000	திறன் விருத்தி	14	2,579,249	394,000	
500,000,000	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	370,897,472	40,214,031	
4,939,400,000			**4,531,555,837**	**538,942,274**	
	வைப்புக் கொடுப்பனவுகள்		22,490,259	9,041,587	ஏசீஏ-4
	முற்பணக் கொடுப்பனவுகள்		83,890,882	57,418,735	ஏசீஏ-5
	ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்			-	
	மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)		106,381,141	**66,460,322**	
			7,909,466,015	**2,798,784,363**	
8,360,000,000			**(4,293,065,825)**	**(176,184,150)**	
			(4,293,065,825)	**(176,184,150)**	ஏசீஏ-7
	டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி			-	ஏசீஏ-3
			(0)	-	

ஏசீஏ -பீ

2023.12.31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2023 ரூபா	2022 ரூபா
நிதியல்லாத சொத்துக்கள்			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	42,352,274,582	41,798,206,152
குத்தகை முதலீடுகள்		19,808,524	89,541,533
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	115,062,031	97,035,503
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	-	-
மொத்த சொத்துக்கள்		**42,487,145,137**	**41,984,783,188**
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		105,959,001	85,096,134
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		42,352,274,582	41,798,206,152
குத்தகை பொறுப்புக்கள்		19,808,524	89,541,533
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ		-
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4	9,103,030	11,939,369
பணிமுற்பண மீதி	ஏசீஏ-3	-	-
மொத்தப் பொறுப்புக்கள்		**42,487,145,137**	**41,984,783,188**

பக்க இலக்கம் 11 முதல் 64 வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின் / பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 65 முதல் 116 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

.....	.....	.....
பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்	கணக்கீட்டு உத்தியோகத்தர்	பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் /
பெயர்:	பெயர்:	பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
பதவி :	பதவி :	பெயர் :
திகதி :2024.02	திகதி :2024.02	திகதி :2024.02

ஏசீஏ- சீ

2023.12.31 இல் உள்ளவாறான காசுப் பாய்ச்சல் கூற்று

	உண்மை	
	2023 ரூபா	2022 ரூபா
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பெறுகைகள்		
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள் இலாபம்		
வருமானம் அல்லாத பெறுகைகள்		
ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	47,290,887	23,119,158
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	3,531,014,417	2,574,459,000
முற்பணங்களை அறவிடல்	91,784,771	61,515,365
வைப்புக்களின் பெறுகை	19,653,695	12,913,626
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	**3,689,743,770**	**2,672,007,149**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுடுக் கொடுப்பனவுகள்	2,776,257,316	1,867,021,543
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	88,571,810	190,689,573
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	36,411,270	48,265,983
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	132,500	-
முற்பணக் கொடுப்பனவு	85,615,210	58,054,750
வைப்புக் கொடுப்பனவு	22,490,034	9,041,637
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	**3,009,478,140**	**2,173,073,486**
தொழிற்பாடடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**680,265,630**	**498,933,662**
முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பொளதீக சொத்துக்களின் விற்பனை	-	-
உப கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)	**-**	**-**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
மூலதன செலவுகள்	680,265,630	498,933,662
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	**680,265,630**	**498,933,662**
முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	**(680,265,630)**	**(498,933,662)**
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)	**-**	**-**
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
உள்ளுர்க் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
பெற்ற நன்கொடைகள்	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)	**-**	**-**
கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:		
உள்ளுர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)	**-**	**-**
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)	**-**	**-**
காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)	**-**	**-**
ஜனவரி 01 ஆம் திகதியீலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	**-**	**-**
டிசம்பர் 31ஆம் திகதியீலுள்ளவாறான இறுதிக் காசு மீதி	**-**	**-**

3.4 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

அறிக்கையிடலின் அடிப்படை

I. **அறிக்கையிடல் காலப்பகுதி;**
இந்த நிதிக் கூற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலப்பகுதி 2023 சனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையானதாகும்.

II. **அளவீட்டுக்கான அடிப்படை;**
நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில், ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்படல் வேண்டும்.

III. **வருமானத்தை அடையாளங்காணுதல்;**
நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்கக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது, காசு கிடைக்கக் கூடிய காலப்பகுதிக்குள் வருமானமாக அடையாளங் காணப்படுகின்றது.

IV. **சொத்து, இயந்திர மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு;**
சொத்துக்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

கிரயமுறை பொருத்தமில்லாத சந்தர்ப்பத்திலேயே சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் மறுமதிப்பீட்டு முறையில் அளவீடு செய்யப்படுகின்றது.

V. **சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்;**
இந்த மீள்மதிப்பு ஒதுக்கீட்டுக் கணக்கானது சொத்து, இயந்திர மற்றும் உபகரண கணக்கின் தொடர்புபட்டதாகும்.

VI. **காசு மற்றும் காசுக்கு சமமானவை;**
காசு மற்றும் காசுக்கு சமமானவை 2023 டிசம்பர் 31 இல் உள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களை உள்ளடக்கியதாகும்.

ஏதேனும் அறிக்கையிடும் நிறுவனம் ஒன்றுக்கு விசேடமான கொடக்கல் வாங்கல்கள் உள்ள சந்தர்ப்பங்களில் அந்த மாதிரிப் படிவங்களில் தேவைக்கு ஏற்றவாறு திருத்தங்களை மேற்கொள்ள முடியும். அவ்வாறே "அறிக்கையிடலின் அடிப்படை" இன் கீழ் அந்த விசேட கொடுக்கல் வாங்கல் தொடர்பில் தேவையான வெளிக்கொணர்தல்களை உள்ளடக்க முடியும்.

தனது அறிக்கையிடல் நிறுவனத்துக்கு ஏற்புடைய கணக்கீட்டு கொள்கைகளை மட்டும் அறிக்கையிடல் அடிப்படையின் கீழ் வெளிக்கொணர்தல் வேண்டும்.

3.5 வருமான சேகரிப்பு செயலாற்றுகை : ஏற்புடையதன்று

3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை

ரூ. ,000

ஒதுக்கீட்டு வகை	ஒதுக்கீடு		உண்மையான செலவினம்	இறுதி ஒதுக்கீட்டின் %ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு
	அசல் ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
மீண்டெழும்	2,800,200	3,420,600	3,271,529	96%
மூலதனம்	987,800	4,939,400	4,531,555	96%

3.7 நி.பி.208 பிரகாரம் ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் முகவராக இத்திணைக்களம்/ மாவட்ட செயலகம்/ மாகாண சபைக்கு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு


தொ.இல	அமைச்சு /திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட ஒதுக்கீடு	ஒதுக்கீட்டு நோக்கம்	ஒதுக்கீடு		உண்மையான செலவினம்	இறுதி ஒதுக்கீட்டின் %ஆக ஒதுக்கீட்டுப் பயன்பாடு
			அசல் ஒதுக்கீடு	இறுதி ஒதுக்கீடு		
1	பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு	75 ஆவது சுதந்திர தின விழா – 2023	21,000,000.00	6,497,000.00	27,496,289.97	100%
		திரு டப்ளிவ்.டீ.எம்.ப்பொதேஜு மற்றும் திரு சீ.கே.சமரசிங்க ஆகியோரின் சம்பளம் மற்றும் படிகள் செலுத்துதல்	59,540.00	59,540.00	11,045.16	18.55%
2	பல்நோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களம்	இணைந்த சேவையில் நியமனங்களைப் பொறுப்பேற்ற பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்களின் சம்பளம் மற்றும் படிகளை செலுத்துதல்	135,000.00	628,548.39	628,548.39	100%
